www.tamilarangam.net

இனி மரணத்துள் வாழ்வோம்

8

# புதுசு

விலை: 3/-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


புதுசு

ஆற்றிவரும்
இலக்கியப் பணிக்கு
எமது வாழ்த்துக்கள்

கல்கிசன்

147, ஸ்ரான்லி வீ
யாழ்ப்பாண

தொலைபேசி: 23711
தந்தி: ஸ்ரீராம்


# புதுசு 8

*மார்கழி 1983*

நாம் எல்லாவற்றையும் மறந்து விடுவோம். மன்னித்தும் விடலாம். ஆம், நாம் முன்னர் தொட்டு அதனையே செய்து கொண்டிருந்தோம். நாம் குட்டக் குட்டக் குனிந்து கொண்டே இருந்தோம். இறுதியில் இறந்து போனோம். எங்களை எரிக்கலாம் அல்லது புதைக்கலாம். ஆக, இறுதியில் தேடிய போது மயானம் கூட எங்களிடம் இல்லாமல் போனது.

உங்களிடம் இவை கூறும் செய்திதான் என்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஊர்வசியின்

## ஒரு கவிதை

எதற்காக இந்தக் காத்திருப்பு?

வயல் தழுவிய பனியும்
மலை மூடிய முகிலும்
கரைவதற்காகவா?
இல்லையேல்
காலைச் செம்பொன் பரிதி
வான் முகட்டை அடைவதற்காகவா?

அதுவரையிலும் என்றால்
காத்திருக்க முடியாது.
என் அன்பே,
எத்தனை பொழுதுகள்
இவ்விதம் கழிந்தன?

காதல் பொங்கும் கண்களை
மதியச் சூரியன் பொசுக்கி விடுகிறான்
கடலலைகள் அழகு பெறுவதும்
தென்னோலையில் காற்று
கீதம் இசைப்பதும்
காலையில், அல்லது
மாலையில் மட்டுமே!

ஆனால்,
எமது பூமி, எமது பொழுதுகள்
எதுவுமே எமக்கு
இல்லையென்றான பின்
இதுபோல் ஒரு பொழுது
கிடைக்காமலும் போகலாம் ...
தொடரும் இரவின் இருளில்
எதுவும்
நடக்கலாம்.

ஆதலால் அன்பே,
இந்த அதிகாலையின்
ஆழ்ந்த அமைதியில்
நாம் இணைவோம் ...



## ஆண்டவருடைய சித்தம்

நந்தினி சேவியர்

தென்னைமர ஓலைகள் சரசரக்க காற்றுச் சற்றுப் பலமாகவே வீசியது. அறை வீட்டின் முன்புறம் போடப்பட்டிருந்த அந்த வாங்குக்கு மேல் அவன் சலனமற்று உட்கார்ந்திருந்தான்.

அவனைத் தனியே விட்டுவிட்டு சிஸ்ரர் படத்துக் கேற்றைத் திறந்துகொண்டு அவனது தமையன் சுவாமியாரைப்பற்றி விசாரிக்கப் போய்ப் பத்து நிமிடங்களுக்கு மேல்.

இன்று சுவாமியாரைக் காண வேண்டுமென்று அவனோ, அவனது தமையனோ நினைத்திருக்கவில்லை. அதற்குரிய சூழ்நிலைகூட காலைவரை இருக்கவில்லை. சடுதியாக அது நிகழ்ந்தது.

''சுவாமியார் உன்னைப் பார்க்க வேணுமாம். உன்னோடை கதைக்க வேணுமாம். சிஸ்ரர்மாரும் அதைத்தான் விரும்புகினம்.''

மூன்று நாட்களுக்கு முன் ஒரு மாலை நேரம். மில்லில் இருந்து லீவில் வந்து மேல் கழுவிக் கொண்டு கிணத்தடியில் நிற்கும் போது அவனது தமையன் இந்த விபரத்தைக் கூறியபோது அதில் தனக்கு அவ்வளவு அக்கறை இல்லாத மாதிரியேதான் இவன் காட்டிக்கொண்டான்.

'' தங்களின்ரை ஆதரவில் இருக்கிற ஒரு பிள்ளையை..., உனக்குக் கலியாணம் செய்து தாறதெண்டால் ... உன்னைப்பற்றி விசாரிக்கத்தானே விரும்புவினம்.''

சுவாமியாரின் விருப்பத்திற்குரிய காரணத்தை நியாயப்படுத்த முனையும் பாவனையில் தமையன் கதைப்பதை உணர்ந்த இவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவனோடு தமையன் நேரடியாக இவ்வளவு வார்த்தைகளைத் தன்னும் உச்சரிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டதைப்பற்றி அவனுக்கு சந்தோஷமாகக்கூட இருந்தது.

இந்த முப்பத்திமூன்று வருட வாழ்க்கையில் அவனும் தமையனும் பேசிக்கொண்ட சந்தர்ப்பங்கள் மிகமிகக் குறைவு ... அப்படி ஏற்படுகின்ற போதுகளில் .. வார்த்தைகள் தடிச்சு ... முக முறிவுகளுடன் ... அவை முடிவு பெற்ற நிலைமைகளே அநேகம் ...

மரியாதை ... பயம் ... என்பதோடு ... வேண்டத்தகாத சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிருப்திகளும் ... பேச்சை அடியோடு கட்டுப்படுத்தியிருந்தன.

அவனது தாய் இறந்து ...தகப்பனிறந்து .. படிப்புகள் ... அரைகுறையாகி .. கூலி வேலை கூடக் கிடைக்காத ... கொடிய நிலைமைகள் ... ஏற்பட்ட அந்தக் காலங்களில் கூட ... வாய் திறந்து ... எதையும் கேட்காத வைராக்கியத்தில் இவனது நாட்கள் கழிந்திருக்கின்றன.

கறேச்சில் ... வேலை செய்த ... காலத்திலும் — கஸ்தூரியார் வீதியிலுள்ள ... ஒரு கடையில் வேலை செய்த போதும் .. அச்சகத்தில் பேப்பரடுக்கி முனைந்து .. முகம் முறிந்து போனதுண்டு.

பொறுப்பற்று ... ஊதாரியாக ... அவன் திரியக்கூடாது என்கின்ற விருப்புக்கு அவர் ஆட்பட்டு அவனை ஒரு கலியாணப் பந்தத்தில் ... தள்ளிவிட முனைவு கொண்டு ... எட்டு வருடங்களின் பின்தான் ... இந்த ஒரு சந்தர்ப்பமும் ... இவனின் சம்மதமும் ... கிட்டியது.

யாரையோ மனதில் வைத்து ... இவனின் சம்மதத்தை அறியத் தமையன் அனுப்பியிருந்த நண்பனிடம் தனது விருப்பத்தை மிக நிதானமாக இவன் வெளியிட்டான்.

'' என்னைப் பொறுத்த வரை ... எனக்குக் கலியாணம் இப்ப அவசரமில்லை ... அப்பிடிச் செய்யிறதெண்டாலும் ஒரு ... அனாதை மடத்தில் இருக்கிற பிள்ளையைத் தான் செய்ய விரும்புகிறன். சிஸ்ரர் மடத்தில் இருக்கிற எங்கடை சொந்தக்காரப் பிள்ளையைக் கேக்கச் சொல்லும் ...''

'மாலி கேக் ஸ்பொட்டி'ன் இஞ்சித் தேநீரை உறிஞ்சியபடி இவன் பேசியபோது வந்த நண்பனே ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தெரிவித்தான்.

ஒரு காலத்தில் அவனது உறவினர்கள் அவனைப்பற்றி பொறுப்பற்றவன் — வருத்தக்காரன் ... கையாலாகாதவன் ... என்று ஒதுக்கித் தள்ளியமையின் மீது கொண்ட வெறுப்பை எட்டி உதைப்பதான பாவனையில் அந்தச் செய்தியை இவன் வெளியிட்டான்.

சங்கானை மின்தறி ஆலையின் முகப்பிலே நின்று ... அவனைப் பற்றிக் காரசாரமாக அவனது தமையனாரிடம் ஏசிய உறவுக்கார நூலகரின் வார்த்தைகளை ஓங்கி அடிப்பதுபோல் ...அந்தவார்த்தைகளைக் கூறினான் ... அவன்.

காற்று ... மீண்டும் தென்னோலைகளைச் சரசரக்க வைத்தது அணிலொன்று .. வீறு—ன் கத்தியபடி அறைவீட்டின் முகட்டில் பாய்ந்ததை இவன் கவனித்தான் ... அறை வீட்டினுள்ளே மணிக்கூட்டில் பத்து மணி அடித்தது. கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான் ... பத்து ... ஏழு ... எந்த மணி சரி ? அவனுக்கு ... ஏனோ எரிச்சலாக இருந்தது.



இந்நேரம் மில்லில் என்ன நடக்கும் ...

'' ஒரு அவியல் முடிந்திருக்கும் ... கெங்காதான் அடுப்புப் பார்ப்பான் ... சின்னத்துரையும் .. தயாபரனும் ... நேசலிங்கமும் காலடிப் பார்கள். சில வேளை ... ஊடு வெட்டியிருப்பார்கள் ... தருமண்ணை ... அந்த மஞ்சள் வர்ண ஸ்கூட்டரில் மஞ்சள் 'கெல்மெட்' டோடு .. பாங்குக்குப் போயிருப்பார். பெரியவரின .. செக்குக்குக் காசு போட வேண்டும் வெள்ளையப்புவின் வண்டில் பத்து மூடை அரிசியுடன் மில்லைக் கடந்து சந்திக்குச் சென்றிருக்கும் குழாய்க் கிணறு குத்துகிறவர்கள் இண்டைக்குத்தானே வருவதாகக் கூறினார்கள் ...

சிஸ்ரர் மடத்தின் ...கதவு திறக்க ... அவனது தமையனும் ... ஒரு கண்ணாடி அணிந்த மெலிந்த கறுத்த சிஸ்ரரும் ...கதைத்தபடி...

இவனுக்குச் சலிப்பாக இருந்தது. எவ்வளவோ வேலைகள் மில்லில் ...அவனை அவர்கள் எதிர் பார்த்திருப்பார்கள் ...

ரோட்டில் வாகனங்களின் இரைச்சல் ..கடற்காற்றின் தென்னோலைச் சரசரப்பு .. அரை மணித்தியாலம் வீணாகி விட்டதான அவஸ்தை ...

ஒரு காலத்தில் வேலையற்று .. வேலை தேடி அலைந்து திரிந்த அந்த நாட்களில் ... இத்தகு நேரப் பிரச்சினை — இருக்கவில்லை ...

வாசிகசாலை ... முகப்பு ... கபாடி விளையாடும் மணற்பரப்பு ... கிட்டியடிக்கும் மைதானம் .. மார்க்சியம் பற்றிய வகுப்புகள் .. கூட்டங்கள் இலக்கியச் சர்ச்சைகள் ... இன்றும் அவை பற்றிய விருப்புகள் இல்லாமல் போகவில்லை. பொறுப்புகள் சுமைகளாகி ... நேரமே தொழிலாகிவிட்டது.

சிஸ்ரரும் தமையனும் படியேறி வந்தபோது இவன் எழுந்து நின்று கொண்டிருந்தான்.

''உங்கடை அண்ணை ... உங்களைப்பற்றி நிறையச் சொன்னவர் .. நாங்களும் உங்களைப் பார்க்க விரும்பினனுங்கள் ...''

சிநேகபூர்வமான புன்முறுவலுடன் அந்தக் கண்ணாடிச் சிஸ்ரர் இவனோடு பேசியபோது அவன் மௌனமாகச் சிரித்தான்.

''ஃபாதர் எப்ப வருவார் ?'' இவன் கேட்டான்.

''வந்திருவார் ... வாற நேரந் தான்.''

இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு விலகி நின்றிருந்த தமையனை இவன் ஏறிட்டான்.

''உங்கடை விருப்பம் என்ன எண்ணிறதை அறியத்தான் ... நாங்கள் உங்களைச் சந்திக்க ... விரும்பினம் ... நீங்கள் ... இங்கை இண்டைக்கு வந்திருக்காவிட்டால் ... உங்கடை மில்லுக்கு நாங்கள் வாறதுக்குத்தான் ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தனுங்கள்... ஆண்டவருடைய சித்தம்... நீங்களே... வந்திட்டியள்...''

சிஸ்ரர் ... சந்தோசமாக கதைத்தபோது ... அவனுக்கு... சற்றுக் கூச்சமாகக் கூட இருந்தது.

''உங்களைப் போல்... ஆக்களிருந்திட்டால்... துரேசாவைப் போல எத்தனையோ பிள்ளைகள்... நிம்மதியடைய முடியும்...''

சிஸ்டர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தா...

''இந்த .. மாசமே... விசயங்களை முடிக்க வேண்டும். பெரிய சிஸ்ரரும் மாறி மட்டக்களப்புக்கு போகிரு. அதற்குள்... இது நடக்கிறது தான் நல்லது. இண்டைக்கே... பிள்ளையை நீங்கள் பார்த்து ... உங்கடை விருப்பத்தை எங்களுக்குச் சொல்லிறது நல்லது... அவளின்ரை அபிப்பிராயத்தையும் நாங்கள் கேக்கத் தானே ... வேணும்...''

தூரநிற்கும் தமையனுரையும் இவனையும் மாறிமாறிப் பார்த்தபடி சிஸ்ரர் ... கதைத்தபோது... இவன் இடைமறித்தான்...

''மன்னிக்க வேணும் சிஸ்ரர் .. இந்த விசயத்திலை... கொஞ்சம் பிந்திறதைத்தான் நான் விரும்பிறன். எனக்குச் சில வசதிகளை செய்யவேணும். நான் என்ன சொல்லவாறனெண்டால்... எனக்கெண்டு நான் சில ஒழுங்குகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

அவன் பேசிய தோரணையில் ஒரு அழுத்தம் இருந்தது மேலும் ஏதோ கூற அவன் முற்பட்ட போது ... சுவாமியாரின் 'கொண்டா' மணிக்கூட்டடியால் திரும்பி அறை வீட்டில் ஏறியது.

தனது மனதில் உள்ள கருத்துக்களை முழுமையாக பகிர்ந்து கொள்ள அவன் விரும்பினுன்.

''கன நேரம் காக்க வைச்சிட்டேன் போலை...'' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் முகத்தை வைத்துக் கொண்டு அறைக் கதவைத் திறந்தார் சுவாமியார்.

அந்தச் சுவாமியாரை அவன் அடிக்கடி கண்டிருக்கிறுன். இரு பாலைச் சந்தியிலும் நல்லூர் மாக்கற்றிலும்... முத்திரை சநதையிலும் ... சிவப்பு நிற அந்த 'கொண்டா' மோட்டார்ச் சைக்கிளையும் சுவாமியாரையும் பல தடவைகளில் எதிர்ப்பட்டிருக்கிறுன்.

அந்தச் சுவாமியார் இவனை விட ஓரிரு வயதுகள் குறைந்தவராகக் கூட இருக்கலாம் என்று கூட யோசித்திருக்கிறுன்.

ஒரு காலத்தில் தான் கூட சுவாமியாராக வரவேண்டுமென்று ஆசைப்பட்ட அந்த நிகழ்வுகள் இப்போது அவனுக்கு நினைவு வந்தன.

அன்று செமினறிக்கு அவன் போயிருந்தால்... இன்று எங்கோ ஒரு கோவிலில் ... பங்குக் குருவாக... திருப்பலிப் பூசையில்... அப்பத்தையும் இரசத்தையும்... எடுத்து ... அவனுக்குச் சிரிப்பு வந்தது...

''சிஸ்ரர் எல்லாம் கதைச்சவ தானே .. பிள்ளையை பார்த்தாச்சா?''

சுவாமியார் அவனைப் பார்த்தார்.

''அவர் ஆறுதலாகத்தான் எதுவும் செய்யமுடியும் எண்டு சொல்லுகிறுர் ஃபாதர்.

சிஸ்ரரின் வார்த்தைகளைக் கேட்ட சுவாமியார் கேள்விக்குறியுடன் அவனது தமையனுரைத் திரும்பிப் பார்த்தார்.

''தம்பி... சொல்லுறது என்னெண்டால்... தனக்கு சில பொருளாதாரக் கஸ்டங்கள் இருக்கிறதெண்டும்... அதை சரிப்படுத்த... கொஞ்ச நாள் தேவை எண்டும்... அதுதான்... யோசிக்கிறுர்...''

''அதுவும் நியாயந்தான்... பெரிய சிஸ்ரரும் மாறிப்போறு... எதுக்கும் நல்ல முடிவாய், கூடிய சீக்கிரம் எடுக்கிறது நல்ல...''

தமையனுரோடு சுவாமியார் ஏதோ ஒரு உறுதிப்பாட்டோடு... கதைத்தார்.

''எந்த மட்டிலை ... என்றால் உமக்கு வசதிப்படும்... திரேசா... நல்ல பிள்ளை உமக்கு ஒரு நல்ல மனைவியாக இருப்பா ... அது பற்றி... நீர் யோசிக்கத் தேவையில்லை... ஆண்டவருடைய சித்தம் உங்கள் இரண்டு பேரையும் இணைக்கப் போகுது...''

''அதுக்காக நான் யோசிக்கவில்லை ஃபாதர்... நான் மில்லில் வேலை செய்யிறன். இருபத்தி நாலு மணித்தியாலமும் அங்கே தான் இருக்கிறன்... நெல்லெடுக்க மன்னர், மட்டக்களப்பு எண்டு... அடிக்கடி பயணம்... எனக்கெண்டு நான் சிலதைத் தேட வேண்டும் .. இன்னும் ஒரு வருசம் பொறுத்து அடுத்த கிறிஸ்மஸ்சோடு எண்டால்...''

மிகவும் அட்சர சுத்தமாக இவன் பேசுவதை சுவாமியாரும் சிஸ்ரரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மடத்திலிருந்து ரீயும்... பிஸ்கற்றும் வந்தன. சங்கோசத்தோடு ரீயை வாங்கிக் கொண்ட இவன்... சற்று நேர மௌனத்தில்... சிந்தனை வயப்பட்டுப் போனுன்.

எவ்வளவோ விசயங்களை மனதில் போட்டுக் கொண்டு அவன் குழம்பிப் போயிருந்தான்... இந்த இடத்திற்கு... இன்று வந்திருக்காமல் ஆறுதலாக ஒரு நாள் வந்திருக்கலாம் என்று கூட யோசித்தான்.

மில்லில் தேடுவார்கள் ... காலையில் வருவதாகக் கூறி... இரண்டு நாள்... லீவில்... வெளிக்கிட்டவன்... இன்னமும் திரும்பவில்லை என்றால் அங்கே அனைத்தும் ஸ்தம்பிக்கும்...

தமையன் செருமி... இவனை நினைவுக்கு கொண்டுவர... இவன் ரீயை மெல்லக் குடித்தான்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''அப்படி என்றால்... திரேசாவை இண்டைக்கே பார்த்திடுமன்.''

சுவாமி அவனை ஏறிட்டார்.

''நாள் இருக்குதுதானே ஆறுதலாக... இன்னொரு நாள்'' இவன் அவரின் வார்த்தைகளை உடனடியாக மறுதலித்தான்.

''சரி... உம்மடை இஸ்டம்... ஆண்டவருடைய சித்தம்... அப்பிடி ..''

எழுந்து நின்ற அவனைப் பார்த்தபடி சுவாமியாரும்... எழுந்து கொண்டார்.

''எதுக்கும் உங்கடை முகவரிக்கு நான் கடிதம் எழுதுகிறேன். இது பற்றி யோசிப்பம் ..''

அவரின் முகவரியை நின்ற நிலையில் குறித்துக்கொண்டான் அவன் ...

வண. பிதா ...
அர்ச். செபஸ்தியார் ஆலயம்,
ஊரணி.

'பஸ் கோல்ற்' வரை அவனும் தமையனும் மௌனித்தே நடந்து வந்தனர். நெடு நேரத்தின் பின் அவர் கூறினார் ... ''நல்ல பதிலாகச் சுவாமிக்கு எழுது ..''

மில்லுக்கு அவன் வரும்போது பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டது. பஸ்சில் யோசித்துக் கொண்டு வந்த விசயங்களை எல்லாம் கோர்வையாக்கி ... இரவு ஒரு கடிதம் எழுத அவன் முடிவு செய்து கொண்டான்.

இரவு பனி கொட்டும் நிலவில் வெள்ளையப்புவிடம் போய்த் திரும்பி வந்து குளிருக்காக இரண்டு சேட்டுக்களை அணிந்து கொண்டு அறைமேசையில் அவன் கடிதம் எழுத உட்கார்ந்தான்.

அன்புடையீர் என ஆரம்பித்து, தனது நிலைப்பாட்டை அவன் எழுதினான் ... நான் கொம்யூனிச சித்தாந்தத்தை நம்புபவன் ... புரட்சி ஒன்றே பிரச்சனைகளைத் தீர்க்குமென்ற உறுதிப்பாடுடையவன். அதற்காக உழைப்பதையே விரும்புபவன் ... எனக்கு வரப் போகும் மனைவி என்னைப்பற்றி அறிந்திருப்பது நல்லதென ... நினைத்தே இதைத் தெரியப்படுத்துகிறேன் என்பது போன்ற விடயங்களை அவன் எழுதினான். தனது தமையனார் தன்னைப்பற்றிக் கூறியிருப்பார் என நம்புவதாகவும் எழுதினான்.

கடிதத்தை எழுதிமுடித்தபோது ... அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது.

ஏதோ நெஞ்சில் கனத்த சுமையை இறக்கி வைத்து விட்டதன உணர்வுடன் அந்தக் கடிதத்தை அவன் போஸ்ற் பண்ணினான்.

மில்வேலையில் கவனம்கொண்டு கணக்கு வழக்குகளைப் பொறுப்பேற்று .. அந்தச் சந்தடியில் சகலவற்றையும் மறந்துவிட்ட .. ஒரு பனி விலகாத காலையில் அவனுக்கு ஒரு கடிதம் கிடைத்தது.

''உமது கொள்கையுடன் ஒத்துப்போக அந்தப் பெண் தயாராக இல்லை இந்தக் கல்யாணத்தில் அந்தப் பெண்ணுக்கும் ... சிஸ்ரர்மாருக்கும் இஷ்டமில்லை ... என்பதைத் தெரிவிக்கச் சொன்னார்கள்.''

நன்றி. இப்படிக்கு,
பிதா...........



## மைத்ரேயியின்

## மொழிபெயர்ப்புக் கவிதைகள் ஐந்து

**1. அவர் எங்கே வசிக்கிறார் என்று எனக்குத் தெரியாது. எங்களால் ஒன்றாக வாழ முடியாது போனதால் நாம் பிரிந்து வாழ்வதற்கு ஒத்துக்கொண்டோம். பிள்ளைகள் என்னுடன் இருந்தார்கள். எப்போதாவது அவர் எனக்குக் கடிதம் போடுவார் அதில் அவரது முகவரி இருக்காது. இவ்வளவும் மட்டுமே என்னால் கூற முடியும்.**

என்னைப் பொறுத்தவரை
உங்களைக் காண வேண்டுமெனில்
உங்களைப் பற்றிய நினைவுகளுடனே — நான்
உறங்கப் போக வேண்டும்.

சில வேளை—
நான் அதிர்ஷ்டம் செய்திருப்பின்
நீங்கள் நேரங் கழித்து வருவீர்கள்.
பொதுவாக,
என் கனவில் தான்!

இரகசியப் பொலிசைப் பொறுத்தவரை —
அவர்கள் என்னைக் கனவுகளுடன் தேடுவதில்லை.
இதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.

ஒரு நிச்சயமற்ற இரவில்
அவர்கள் என்னைக் கண்டால்,

'பிறேக்'குகளின் கிறீச்சிடல்கள்,
நகரும் வாகனங்களிலிருந்து
குதிக்கும் மனித அரவங்கள்,
நெருங்கி வரும் காலடியோசைகள்,
என்னை எழுப்பும். —

உங்களுக்குத் தெரியாது.
என்னைப் பாதுகாக்க,
என்னைத் தேட
நீங்கள் இங்கிருக்க மாட்டீர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

—பின்பு ஒருநாள்
அவர்கள் உங்களுக்குச் சொல்வர்—
தாம் என்னைக் கைது செய்யவில்லையென்று.

## 2. மெல்லிய சாட்சி

அவன் இறந்திருப்பின் — அது
எனக்குத் தெரிந்திருக்கும்.
எப்படி என்று கேட்க வேண்டாம் ;
எனக்குத் தெரிந்திருக்கும்.

என்னிடம் ஆதாரமில்லை,
தடயங்களில்லை, விடையில்லை
அதை நிரூபிக்கவோ
நிரூபிக்காமல் விடவோ
ஒன்றுமே யில்லை.

வானம் இருக்கிறது
அதே நீலத்துடன்.

ஆனல், இது ஒரு ஆதாரமாகாது.
'கொடுமை'கள் தொடருகின்றன,
வானம் ஒருபோதும் மாறுவதில்லை.

பிள்ளைகள் விளையாடி
முடித்து விட்டனர்.
இப்போது,
காட்டுக் குதிரைக் கூட்டம்போல்
நீரருந்தத் தொடங்குவர்.
இன்றிரவு,
தலையணையில் முகம் பட்டதும்
உறங்கி விடுவர்.

ஆனல், அவர்களது தந்தை
இறக்கவில்லை என்பதற்கு
ஆதாரமாக
யார் இதை ஏற்பர்?
'விசர்' தொடர்கிறது.
பிள்ளைகள் எப்போதும்
பிள்ளைகளாயே உளர்.



நல்லது, அதோ ஒரு பறவை.
— பறப்பின் இடையில்
காற்றில் சிறகுகளை
அப்படியே நிறுத்தி ...
அது ஒவ்வொரு நாளும் வருகிறது.
முன்பு போல
ஒரே நேரத்தில்
ஒரே பூவிற்கு.

இதுகூட எதையும் நிரூபிக்காது.
அவர்கள் அவனைக்
கொண்டு போன நாளில்
இருந்ததைப் போலவே ...
ஒவ்வொன்றும் அப்படியே இருக்கிறது.
எதுவுமே நடவாததைப் போல.
அவர் வேலை முடிந்து வீடு வருவதை எதிர்நோக்கி,
நாங்களும் சும்மா காத்திருக்கிறோம்.
அறிகுறியில்லை, தடயங்களில்லை,
அதை நிரூபிக்கவோ,
நிரூபிக்காமல் விடவோ
ஒன்றுமே யில்லை.

ஆனல், அவர் இறந்திருப்பின் — அதை
நான் அறிந்திருப்பேன்.
அது மிக எளிமையானது,
எப்படி என்று கேட்க வேண்டாம்;
நீங்கள் உயிருடன் இல்லாவிட்டால்
அது எனக்குத் தெரிந்திருக்கும்.

## 3. இப்போது அவள் தனது பாற் பற்களை இழந்து கொண்டிருக்கிறள்.

யாரம்மா அது?
யாரது மாமாவுடன் நிற்பது?

அது கண்ணே, உனது அப்பா.

அப்பா ஏன் ஒருபோதும்
என்னைப் பார்க்க வருவதில்லை?

ஏனென்றல், அவரால் முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா செத்துப் போனாரா?
அதுதான் அவர்
ஒருபோதும் வீட்டிற்கு வருவதில்லையா?

தந்தை உயிருடன் இருப்பதாக
நான் கூறினால்
அது பொய்.
உயிருடன் இல்லை என்றால்
அதுவும் பொய்.

என்னால் அவளுக்குக் கூற முடிந்த,
பொய்யற்ற வசனம்
இது ஒன்று தான்;

அப்பா ஒருபோதும்
வீடு வருவதில்லை
ஏனென்றால்,
அவரால் முடியாது.

## 4. இரண்டு தரம் இரண்டு

நண்பனே,
சிறைக் கூண்டி லிருந்து
அந்த அறைக்குச் செல்லும்
படிகளின் எண்ணிக்கை
எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

அது இருபது ஆயின்,
அவர்கள் உன்னைக்
குளிய லறைக்கு
அழைத்துச் செல்லவில்லை.
அது நாற்பத்தியைந்து எனின்,
உடற்பயிற்சிக் காகவும்
அழைத்துச் செல்லவில்லை.

எண்பதையும் தாண்டியபின்
ஒரு மாடிப் படிக்கட்டில்
கண் தெரியாமல், தடுக்கி,
விழப்பார்த்தாயானால்
ஓ! நீ எண்பதைத் தாண்டிவிட்டாயெனில்,
அவர்கள் உன்னை கூட்டிச் செல்ல



ஒரே ஒரு இடம் மட்டுமே உண்டு.
ஒரே ஒரு இடம் மட்டுமே ...
ஒரே ஒரு இடம்!
அவர்கள் உன்னை அழைத்துச் செல்வதற்கு,
ஒரே ஒரு இடமே மீந்துள்ளது.

## 5. அடையாளம்

நீங்கள் என்ன கூறினீர்கள்
அவர்கள் 'இன்னொன்'றைக் கண்டுபிடித்துள்ளனரா?
நீங்கள் சொல்வது கேட்கவில்லை.
இன்று காலை—
'இன்னொன்று' ஆற்றில் மிதந்ததா?
உரத்துக் கதையுங்கள்—
ஒருவரும் 'அவனை' அடையாளம் காணவில்லையா?
பொலிசார் கூறினர் அவனது தாய்கூட,

அவனைப் பெற்ற தாய்க்குக்கூட
அடையாளம் காண முடியவில்லை என்று.

அவர்கள் கூறினரா?
மற்றப் பெண்கள் பார்த்து விட்டனரா?
நீங்கள் கூறுவது விளங்கவில்லை—
அவனைப் புரட்டி, முகத்தை—கைகளைப் பார்த்தனர்,
அவர்கள் அமைதியாக, துயரத்துடன்
ஆற்றங்கரையில் காத்திருந்தனர்,
அவனைத் தண்ணீரிலிருந்து எடுத்தாகி விட்டது.
அவன் நிர்வாணமாக,

பிறந்த நாளிற் போல கிடந்தான்.
அங்கு ஒரு பொலிஸ் அதிகாரியும் கூட.
நான் வரும் வரை அவர்கள் போகமாட்டார்களா?

அவன் ஒருவருக்கும் சொந்தமில்லை
என்று கூறினீர்கள்?
அவர்களிடம் சொல்லுங்கள்;

இதோ நான் உடை அணிகிறேன்
புறப்படுகிறேன் என்று.
அதிகாரி போனமுறை இருந்தவனாயின்,
அவனுக்குத் தெரியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன நடக்குமென்று.
அந்தச் சடலம்
எனது பெயரைக் கொண்டிருக்கும்.
எனது மகனது, கணவனது,
தந்தையாரது
பெயரைக் கொண்டிருக்கும்.

நான் தாள்களில் ஒப்பமிடுவேன்
அவர்களிடம் கூறுங்கள்
அவர்களிடம் கூறுங்கள்
நான் வந்துகொண் டிருப்பதாக,
எனக்காகக் காத்திருக்கும்படி.

அந்த அதிகாரி 'அவனை'த் தொட விடவேண்டாம்
அவனை நோக்கி ஒரு அடிகூட எடுத்துவைக்க
அந்த அதிகாரியை விடவேண்டாம்

எனது சடலத்தை நானே புதைப்பேன்,
அவர்களைக் கவலைப்பட வேண்டாமென்று கூறுங்கள்.

மூலம் - ஸ்பானிய மொழியில்:
ஏரியல் டோர்வ்மன்


யாழ்ப்பாணத்தில்
சிறந்த ஜவுளி வகைகளைப்
பெற்றுக் கொள்ளச்

சிறந்த இடம்

↓

க. நாகமுத்து அன் சன்

48-50, பெரிய கடை யாழ்ப்பாணம்




campus பற்றிய

கதை — அ. ரவி

## 1. ஒரு கிழமை

ஆங்கில வகுப்புடன்தான் ஆரம்பமானது. ஆனால், ஆங்கில வகுப்பென்பதிற் 'விட' ragging period என்பது கூடுதலாகப் பொருந்தும்.

முதலாள் வந்த போதே, ''கை வீசம்மா கை வீசு கம்பசுக்குப் போகலாம் கைவீசு...'' இடமே சரியாகத் தெரியாமல் r. b. என்றால் ramanathan block என்று அறிந்து, அது எங்கே என்று தெரிந்து ''கைவீசம்மா கைவீசு...''

''வாழ்த்துக்கள்'' என வந்த ஆங்கிலப் பேராசிரியர் நினைவில் தங்கினார். கண்ணாடியும் சிறிது தாடியும், கொஞ்சம் வழுக்கை மண்டையாகி, pipe உடன் வந்தவர். அப்பொழுதில் seniors நின்ற இடம் தெரியாமல் மாறினார்கள். அப்பொழுதும் கூட பக்கத்திலிருந்தவள் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள். சேலைத் தலைப்பால் துடைத்தபோது எனக்கு ஆதரவாக முதுகைப்பற்ற வேண்டும் போல் இருந்தது. ''இதைப் பெரிசுபடுத்தாதீங்கோ இதைப் போல இன்னும் எவ்வளவு நடக்கப் போகுது. இதுக்கே இப்பிடியெண்டால்...?'' அவள் side ஆக என்னைப் பார்த்துவிட்டு வெறுமனே இருக்க முயன்றாள். பிறகு என்னைப் பார்த்தபோது ''உங்கள் அனுசரணை தேவை'' என்னுமாப் போல.

எங்கள் group காரரிடம் seniors பெயரைக் கேட்பதனால், எங்களுக்கும் பெயர் பாடமாகப் போனது.

அழுதவள் - பிரேமலதா.

வெள்ளை, சுருட்டைத் தலைமயிர் - ஆனந்தி.

பெரிய ஜிப்சி போட்டு, ராஜகுமாரியின் உடம்புடன், பச்சைச் சேலை அடிக்கடி கட்டுபவள் - வனஜா.

நாசூக்காகச் சிரிப்பவள் - நிர்மலா.

இன்னும், ஹரிகரன், மகாதேவன், அற்கீம், தனு, யோகேஸ்வரி, இவர்கள் அருகிருந்தவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகம் கறுத்திருண்டவர்கள்தான் இதில் அதிகம்.

பிறகெல்லாம் பிரேமலதா seniors உடன் சிரித்து மழுப்பப் பழகி விட்டாள். வருபவன்களும் இளிச்சவாயன்கள்தானே.

நெஞ்சு பதறும் நேரம் tea brake time தான். அதுவரை lecturer mr. தர்மராஜ் உடன் கலகலக்கலாம். பிறகு 'உம்' மென்று போகும் வரும் seni rs ஐ கண்கள் வெளிறப் பார்த்துக்கொண்டு.

எனக்கு நடந்த ragging பொதுவாக public உடன் ன் பரிச்சயம். நாச்சிமார்கோவிலில் திரிபுண்டரக் குறியுடன், டாங்க நமஸ்காரம் செய்து, பின் ரன் கோலத்தில் (சேட்டின் ஒரு கை மடித்து, மறுகைவிட்டு லையைக் குழப்பி, லோங்ஸின் ஒரு கால் மடித்து, சட் ந ப யை லோங்ஸ் ள் விட்டு செருப்பு இ னையும் கையில் கி... இத்யாதி கோல நுடன்) கதாப் பிரசங்கம் செய்வதும், போற வாற பஸ், மினி பஸ்களுக்கு கை காட்டியதும்.

மற்றவர்களின் ragging அவரவர் அமைப்பைப் பொறுத்தது.

காலை lecture mr. தர்மராஜ் எடுத்தபோது, மாலை lecture mrs. அமுதநாயகத்தால் எடுக்கப்பட்டது.

mrs. அமுதநாயகம் பற்றி இங்கு சொல்லுதல் வேண்டும். தனக் கேயுரிய தனி ஆளுமையுடன், எங்கள் கூட்டத்தை அணைத்துக் கொண்டது அவர்நெஞ்சு. அனேகமாக வரும் seniors ஐத் துரத்தி விடுவதும், - நாய்களா? - வந்தவுடன் எங்களைத் தண்ணீர் குடிக்க அழைத்துச் செல்வதும் - மந்தைக் கூட்டமோ? - மிகவும் பாதுகாப்பாக - கண், இமை எனும் பதங்கள் இங்கு அதிகமாமோ? - அவர் வந்தாலே குதூகலம் தான். அது mrs. அமுதநாயகத்தின் ஆளுமை தான்.

டையில் ஒரு நாள் ஒரு ஒடுங்கி போன கிழவி அந்த வழியால் சென்ற போது ஹரியைத் தட்டி ''உம்முடைய அம்மா போறு'' என்றேன், ஹரியின் முகம் கறுத்தது. ''இப்பிடித்தான் எங்கன்ரை அம்மாவும்'' என்றான். நெருக்கென்றது. ''sorry'' என்றேன். ''very sorry'' என்றேன். அவன் கையை ஆதரவாகப் பிடித்து ''மன்னிச்சுக் கொள்ளும் உனக்குத் தெரியாமப் போச்சு. என்ன செய்றதெண்டு தெரியேல்லை. மன்னிச்சுக் கொள்ளும்'' என்றேன். அவன், ''பரவாயில்லை'' என்றான். அதன் பிறகு, அவனுடன் உறவு நெருக்கமானது.

campusஇற்கு வந்த முதலுள் உதயனைச் சந்தித்த பிறகு இன்னமும் தான் சந்திக்கவில்லை. எவ்வளவு ஆசையாக இருக்கிறது. ஒன்றாகப் படித்தவன், ஒன்றாகத் திரிந்தவன். அவன் வேறு group என்பதாலும், ragging period என்பதாலும் எங்கள் சந்திப்பு அறுந்து போனது. அதிலும் முதலுள் அவன் சொன்ன கதை பற்றியும் கேட்கவேண்டும். அது முக்கியம் தானே.



முதலுள் raggingஇற்கு ஒழிந்து, seniorsஇற்கு ஒதுங்கி, தண்டவாளத்தடியில் உதயனைக் கண்ட போது, தண்டவாளத்தில் நெடுநீள நடந்து, வானம் மந்தாரமாக இருந்து, தண்டவாள அருகில் புற்கள் பச்சையாய், உயரமாய் வளர்ந்து, எதிரே தெரிந்த ஸ்ரேசன் வாங்கில் அமர்ந்து - சொன்னான். ''ஒரு சிங்கி அம்பிட்டாள். கதைக்க சந்தோஷமாக இருக்கிறாள். போகப்போக பெயரைக் கேக்க வேணும்'' பெயரைக் கேட்டானோ தெரியாது. அவசரமாகச் சந்திக்க வேணும்.

raggingஇலும் எவ்வளவு நல்ல விஷயங்கள் கிடைக்கிறது. அல்லாவிடில், யோகு - யோகேஸ்வரியின் சுருக்கம் - இவ்வளவு நன்றாகப் பாடுவாள் என்று எப்படி அறிய முடியும்? ''தோகை இளமயில்...'' எவ்வளவு நன்றாக இருந்தது. ''ஒரு ராகம் பாடலோடு...'' radioவில் பிறகு கேட்க எவ்வளவு இனிமையாக இருந்தது. அப்பாட்டின் ஒவ்வொரு அசைவும் நினைவில் நின்றது. பிறகு பிறகு, எங்கெங்கு, எந்த எந்த lecture roomகளிலும் சன்னமாக யோகுவின் குரல் கேட்கும். எவ்வாறு பாட்டினை நின்று கேட்காமல் காலடி எடுத்து வைக்க முடியும்? ''மேகமே, மேகமே பால்நிலா தேயுதே...'' எழும்போது அது எவ்வளவு இனிமையுடைத்து? ''எனக்கு ஒரு மலர்மாலை நீ வாங்க வேண்டும்...'' குரலின் அசைவில் கண்ணில் நீர் துளிர்த்தது. அந்த ஹம்மிங் வாணி ஜெயராமா, யோகுவா? ''அமுதே, தமிழே, அழகிய இசையே எனதுயிரே!'' நானும் ஒருக்கால் அவளிடம் ''மானஸஸஞ்சரரே...'' கேட்க வேண்டும். ragging period முடியட்டும்.

ragging periodஇலும் ஒருவர் மேல் ஒருவர் எவ்வளவு அன்பு செலுத்த முடிகிறது. அதிலும், தனுவின் - வண்ணதாசனின் 'தனுமை' கதாநாயகி அல்ல - அன்பு பிரத்தியேகமானது. 'நான் உங்களின் சகோதரி போல' என்கிற மாதிரி. ragging என்றால் அவர்கள் சொல்வதை செய்யச் சொல்வாள். ''சொன்னதைச் செய்திட்டால் பிறகு பிரச்சினை இல்லை'' என்பாள். அவளுடன் நிறையக் கதைப்பின் பின், எனது தூரத்து ஊர் நண்பனின் தங்கை என அறிந்தது மகிழ்ச்சியைத் தந்த ஒன்று.

tap அடியில் இது நடந்தது. senior girls சிலர் வந்தனர். என்னைப் பார்த்த பார்வை ragging இன் ஆரம்பம். ''என்ன பெயர்?'' சொன்னேன். ''அப்பன் இல்லையோ?'' ''இருக்கிறார்'' அவர் பெயரும் சொன்னேன். ''சரக்கு போட்டிருக்கிறியோ?'' ''இல்லை'' ''ஏன்'' மௌனம். மௌனத்திலும் என் பார்வை setஇற்குள் தொங்கலில் இருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளிடம் சென்றது. அழகாக இருந்தாள். ஒல்லியாக இருந்தாள். நீட்டுக்கு தலைமயிர் இருந்தது. சிவந்தவள் மிடி போட்டிருந்தாள். என் கவனத்தை மிகவும் கவர்ந்தாள்.

''என்ன அவளைப் பார்க்கிறாய்?'' என்றாள் ஒருத்தி.

''ஒண்டுமில்லை'' என்டன்.

''அவளுக்கு எவ்வளவு மார்க்ஸ் போடுறாய்?'' என்றாள்.

படக்கென்றது. முகத்தில் அறையவேணும் போலை.

''பத்தொம்பது'' என்றேன். திருப்தி வந்தது. அழகில்லா ஒருத்திக்கு நான் அறுபது மார்க்ஸ் கொடுத்திருப்பேன். நல்ல காலம் நான் முன்னர் கேள்விப்பட்டது மாதிரி பத்தொன்பது தோப்புக்கரணம் போட என்னை விடவில்லை.

room ragging பற்றி எவ்வாறு சொல்லுதல் இயலும்? உடைகளைந்து, மனம் கூட நிர்வாணமாகி, கூச்சப்பட்டு, அது அசிங்கம். பிரேமலதா அடிக்கடி raggersஐ, 'நாய்கள் நாய்கள்' என்று முணுமுணுப்பது room raggingஇல் சரியாகவே தெரிந்தது. ஆனால் 'கம்பஸ் காப்பு' கொஞ்சம் கவித்துவமாக இருந்தது. மணிவாசகரின் திருவாசகம் படிப்பது போல. அதனை இயற்றியவன் பாராட்டப்பட வேண்டியவன் தான்.

தொப்பூளில் சின்னி விரலை வைத்து, குனிந்தபடி வாயில் பெருவிரலை வைத்தபடி, மூன்று தரம் சுத்தும் போது... அது 'கம்பஸ் கள்ளு' தான்.

'எப்பொழுதடா social நடக்கும். எப்பொழுதெல்லாம் இதிலிருந்து விடுதலை கிடைக்கும்' என்கிற மாதிரியான உணர்வு அடிக்கடி.

ஆத்மாவைக் கொல்லுகிற விஷயம் இந்த ragging என்று ஒரு கூட்டத்தில் கருதப்பட்ட போதும் இது தனி ஆத்மா சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல, தனி ஆள் அல்ல; தனி ஆளுமையை பிரகடனப் படுத்தும் செயல் அல்ல; நாங்களும் கூட்டத்தில் ஒருவன் எங்கள் முகங்களும் சேர்ந்ததே இவ்வமைப்பு எனும் உணர்வு பிறகு நெஞ்சில் உறுதியாகி.

பிறகு, பிறகெல்லாம், seniors இல்லா நேரங்களில் எங்கள் groupஇல் குதூகலம் அளவுக்கதிகம். இந்தக் campus எங்கன்ரை என்னுமாப் போலை.

நான் அதற்குப் பிறகு canteen இற்குப் போவதை நிறுத்திக் கொண்டது நல்லதாகப் போயிற்று. மேசையின் மேல் நின்று first year ஒருவன் fanஐச் சுற்றிக் கொண்டிருந்தான். அவன் first year என்று கண்டுபிடிப்பது அவ்வளவு பெரிய சிரமமில்லை. முகத்தில் தாடி, மீசை இல்லாமல் clean shave ஆயின் first year.



சிறிது பயத்தைக் கொடுத்தது இவைகளே. உடம்பு கூடிய அந்தப் பெண்ணிடம் போய் ''நீங்கள் எத்தினை றாத்தல்?'' என்றால் எப்படி இருக்கும். நல்ல காலம் அவள் சிரித்துக் கொண்டாள்.

அந்தக் கண்ணாடிக்கார girl இடம் கண்ணாடி வாங்கி அணிந்து கொண்டு library block முழுக்க சுற்றிக் கொண்டிருந்ததை சிரிக்காமல் சொல்ல முடியவில்லை.

இன்னும் சொல்வதற்கு எவ்வளவு விஷயங்கள் இருந்தன. ஆனால் பிறகு,

social வந்தன்று தான் கொஞ்சம் சோகமாக இருந்தது. social இரவுதான் எல்லாம் முடிந்ததாக. இப்படி ragging இன்னும் வராதா எனும் தாபம், ஏக்கம்...

## 2. மறு கிழமை

குடையப் பிடித்து நாங்கள் நடந்தோம். இருந்தும் கூட இது சாத்தியமாகிறது. அந்தரோட்டில், அவள் முகம் தெரியக்கூடும். இது இருவருக்கும் பொதுவானது.

சாப்பிடப்போன இடம் கூட அப்போதைய மனநிலையிலிருந்து வித்யாசமாகப்பட்டது. ''நான் நாளைக்கு தான் சாப்பிட வருவன். இப்ப அவனோடை சும்மா......'' என்றபோது சாப்பாட்டு அன்றி, மெலிதாகப் புன்னகைத்து கொஞ்சம் பொறுத்து, பால்கோப்பி தந்தது நிறைய நேரம் இனித்தது.

அடிக்கடி இவன், ''வித்தியாசமான வீடு. அங்கையிருக்கிற பெட்டைகள் நல்லாப் பழகுங்கள் - விருப்பம் இல்லாமல் ..'' என்று சொன்னது, அவ்வளவாக காதில் ஏறாமல் போனது. அதற்கு அந்த 'அவளின்' என்பால் பற்றிய ஈர்ப்பும், முகமும் மனசு நிறைந்து போனது காரணமாகும்.

சாப்பாட்டு வீட்டில் முகம் கொடுத்து கதைக்க வெட்கமாகிப் போனதால், கதைப் புத்தகத்தில் கண்ணைப் புதைக்க, அன்ரியின் முதலாமவள், ''எப்படியும் கதைப்புத்தகம் முடிக்கிறதெண்டு தான் இருக்கிறியள்'' என்ற போது அசடு வழிவது அவசியமாகியது. பிறகு இவன் சாப்பிட்டுக் கொண்டே, அவன் நெடுகக் கதைப்புத்தகத்தோடை'' என அவனைப் பார்த்து கொஞ்சம் சிரிக்கலாம் போல் தோன்றியது. பிறகும் அவள் ''என்னட்டைப் புத்தகத்தை தாறதுக்கோ இவ்வளவு பாஸ்ரா வாசிக்கிறியள்?'' எனும் போதும், முகத்தை நிமிர்த்தி சிரிக்கலாம். பிறகும் ஒரு எண்ணம் வந்தது, அவளின் கதையை நிப்பாட்ட வாயிலை ஒரு முத்தம் கொடுத்தால் என்ன என்கிற மாதிரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாமவள் இவ்வீட்டில் வித்யாசமாகி, இந்தக் குடும்பத்தில் நான் பிறக்கவில்லை என்னுமாப்போல, ரேடியோவில் பாட்டுடன் சேர்ந்து தானும் 'ஹம்' பண்ணியதும், தமக்கை கூப்பிட்டபோது'' what?'' என்றதும் கூட அவள் அப்படித்தான் இருக்கக்கூடியவள் என எண்ண வைத்தது. அதன் பிறகும் முதலாமவளின் கதைப்பு கூட - பூங்கண்டின் மண்ணை கிண்டிக் கொண்டு - சந்தோஷமாக நெஞ்சைத் தொட்டது.

பிறகு மழை பெய்து, குடை பிடித்து நீண்ட ரோட்டால் நடக்கும் போது இவன் சொல்லிக் கொண்டிருந்தான். ''அந்தச் 'சிங்கி'ன்ரை பேரைக் கேக்க மறந்து போனன்.'' என்றபோது எனக்கு சேலைகட்டி, ஒற்றைப் பின்னலை முன் விட்டு, சந்தோஷமாக சிரிக்கிற முகத்தில் லயிப்பு ஏற்பட்டது. நான் இவனுக்குச் சொல்லலாம் என்றிருந்த வசனம் இதுதான். ''அவள் இண்டைக்கு இரட்டைப் பின்னலோடை, மிடியும் போட்டு, நெற்றியில் கறுப்புப் பொட்டு வைத்து, குட் மோர்ணிங் என்ற போது சந்தோஷமாக சிரித்து, குட்மோர்ணிங் என்றாள்'' என்பது கடைசியாக room இற்கு வந்தபோது சொல்லி முடித்தேன். ஆனால் அவன் இதைக் கூட அசட்டை செய்து, பாசி நிறைந்து வழுக்கும் வாசற்படி ஏறி roomஐத் திறந்தான்.

அது பிடிக்காமற் போனதின் அர்த்தம் விளங்காமல் ''அந்தச் 'சிங்கி'ன்ரை பேரைக் கேட்டிருக்கலாம்'' என்றும் பிறகும் பிறகும் சொன்னான். உடனே நான் சொன்னது ''எனக்குத் தெரியும் என்ரை 'சிங்கி'ன்ரை பெயரை - வதனி'' என்றது அவனுக்கு கறுக்க வைத்தது. அதுவும் கூட நான் ஒரு படி மேல் என்பது தான் அவன் கறுப்பின் அடையாளம்.

அன்றும் கூட - முதலாள் ராகிங்குக்கு ஒழிந்து - தண்டவாளத்தில் நெடுநீள நடந்து, வானம் மந்தாரமாக இருந்து, தண்டவாள அருகில் புற்கள் பச்சையாய் உயரமாய் வளர்ந்து, எதிரே தெரிந்த ஸ்ரேசன் வாங்கில் அமர்ந்து - அன்றும் கூட பிரஸ்தாபித்தான்.'' ''ஒருசிங்கி அம்பிட்டாள் கதைக்க சந்தோஷமாக இருக்கிறாள். போகப்போக பெயரைக் கேக்க வேணும்'' அது இன்னும் இல்லாமல் போனது.

கடையில் ஒருபிளேன்ரீ குடித்து, வீதியால் சென்றபோது குடை விரிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது.

அப்பொழுது அவனது 'சிங்கி' ஒற்றைப் பின்னல் முன்னால் விட்டு, எதிரில் வந்து சிரித்த போது, இவனைத் திரும்பி பார்க்க மனசு வரவில்லை. காரணமும் உண்டு. இவன் மிகவும் குன்றிப் போன சிரிப்பு கொண்டிருந்தான். எனக்கு வதனியைக் கண்டவுடன்



நெஞ்சை நிமிர்த்தி சிரிக்கக்கூடிய அளவிற்கு இவன் குன்றிப் போவதன் அர்த்தமிழக்கப்பட்டது.

மழை பெய்து ஓய்ந்த campus புல்வெளியின் பச்சை விரிப்பில் இருக்கும் மழைத்துளிகளைப் பார்த்தவாறு, கல்வாங்குகளில் அமர்ந்தவாறு இருந்தோம்.

இனி, lecture இருக்கிறது என்பது அந்தக் கணத்தில் மறக்க வேண்டும் போல் இருந்தது. அனேகமாக அவன் மறந்த நிலை. science faculty பக்கம் தெரியும் வண்ண வண்ண உடுப்புகள், libraryஇல் இருந்து இறங்கும் சிறு கும்பல், தூரத்தில் தெரியும் ஆனந்த குமாரசாமி விடுதி, பால சிங்கம் விடுதி இப்படியாக.

இவன் பிறகு, நீண்ட நேரத்தின் பின்னர்தான் இதைச் சொல்ல வெளிக்கிட்டபோது, அவசரமாக நான் சொன்னது, ''காதல் என்பதும் கூட ரசனைக்குரிய விஷயம் தான்'' என்பது. ஆனால் அவன் சொன்ன வசனத்தைக் கேட்ட பின்னர் நான் இதைச் சொல்லாமல் விட்டிருக்கலாம் போல் தோன்றியது. இதுதான் ''ஒரு பிளேன்ரீ குடிக்கக் காசில்லாமல் இருக்கேக்கை காதல் என்னத்துக்கு? நாங்கள் சிரிக்க மட்டும் செய்வம்.''

இது நெஞ்சில் உறுதியாகப் போயிற்று.

## 3. இன்னொரு கிழமை

இதனை நான் உங்களுக்குச் சொல்லுதல் வேண்டும். எப்படி? கோஷம் இடுவேனோ? தெரியாது. 'நவபாசிசவாதி' என அவர்கள் அன்றைக்கு எனக்கு இருந்த மன நிலையில் நான் அழுதிருக்கலாம். கொடும்பாவியை எரிக்கும் போது என்னால் எப்படி உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடிந்தது? சொண்டுகளைக் கடித்துக் கொண்டு நான் என்ன மாதிரி மரம் போல் நின்றேன். சாப்பிடாமல் நாலு நாளாச்சுது. இருந்தும் நான் கத்தலாம் - எங்கள் சக்தி மக்கள் சக்தி. மாணவர் சக்தி மாபெரும் சக்தி. அப்பொழுது அவர்கள் முகத்தில் எவ்வளவு பிரகாசம் பொங்கியது. அன்றைக்கு ஸ்ரீலங்காவின் 'சுதந்திர நாள்' என்பது ஏன் எங்களை இவ்வளவு வஞ்சித்தது? அந்தப் பிரகாச முகங்களின் சேர்க்கையில் தீப்பொறி எவ்வளவு கிளம்பியது. இது எரிக்கப் போதாதா? இன்னும் ஆயிரமாயிரம் வேண்டுமா? இது மாத்திரமில்லை - இதுக்கு முன்னும் நடந்தது. உங்களுக்குச் சொல்லுதல் வேண்டும்.

கேளும்.

செவ்வாய்க்கிழமை காலையில் தான் தொடங்கியது. நான் இன்னும் என்னுடன் எழுபத்தைந்து பேர் வரையில். இராமநாதன் மண்டபத்து முன்னால் போட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்த கொட்டிலில்தான் உண்ணாவிரதம். நாலு நாள் இருக்க வேண்டும். சாப்பிடாமல் வெறும் பச்சைத் தண்ணியுடன்.

மதியம் ஒரு மணிக்கு பசியெடுத்தது. பல்லைக் கடித்தோம். மூன்று மணிக்கு பசிக்களை. அவரவர் இருந்த இருந்த இடத்திலேயே படுக்கை. குணாளன் சொன்னது அந்த நேரத்திலும் சிரிப்பைத் தந்தது. இப்ப ஜேயார் நல்லா வெட்டிப்போட்டு, 'மணி' நித்திரையடிப்பான்'' அந்த உண்மை மனசைச் சுட்டது.

மனோ கதைப்பதற்கு நல்ல துணையாக இருந்தாள். ''ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி பிடிக்கும்'' என்றாள். ' 'ஆற்றை எழுத்துப் பிடிக்கும்?'' என்று நான் கேட்ட போதே இதனைச் சொன்னாள். அவளுக்கு மகத்தான நாவலாக மக்ஸிம் கோர்க்கியின் 'தாய்' நாவல் தான் தெரிந்தது. அந்நாவலைப் பற்றி, வரிவரியாக ஒன்றிப் போய் அவளுடன் கதைக்க முடிந்தது.

பின்னேரத்தில் தேனீர்ப் பசி. ஒரு வடையும் சாப்பிட்டு - அல்லது போண்டா - வெறுமனே நாக்குக்கு சப்புக் கொடுக்கிற பிளேன் ரீயும் குடித்து அது நேற்று நடந்தது. முந்தநாள் நடந்தது. அதுக்கு முன்னமும் நடந்தது. அது ஏலாது. இண்டைக்கு ஏலாது. நாக்குகளில் உணர்வு துளிர்த்தது. வாயைச் சப்புக் கொட்ட வேணும். இண்டைக்கு கட்டாயம் பிளேன்ரீ எதிர்பார்க்கும் உணர்வு. வேண்டாம். மரத்துப்போ.

உப்புக்கரைத்த தண்ணி. சாப்பாடு இல்லாட்டி உடம்பில் அமிலம் ஊறுமாம். அதை வெட்டிச் சமப்படுத்த வேண்டுமாம். உப்பு காரயாம் கரைச்சுக் குடிச்சால் உடம்புக்கு நல்லதாம். physical science படிக்கிற கேதீசுக்கு உப்பு கரைக்கிறதெண்டால் வலு சந்தோஷம். எனக்கு அவன்ரை மூஞ்சிலை உப்பாலை எறிஞ்சால் என்ன எண்ட மாதிரி இருக்கும். குடிக்கிறதே பச்சைத் தண்ணி. அதுக்கை உப்பையும் கரைச்சுக் குடிக்கிறதெண்டால்?

வெள்ளை வெளேரென்ற library building உம், மஞ்சளாகிப்போன வெயிலும், இடையிடை காய்ந்தும், பச்சையாக இருக்கிற புல்வெளியும் படுத்திருக்கும்போது அழகுதான் என எண்ண வைக்கிறது. மஞ்சள் வெயில் மாலை பிறகு சிவப்பாகிறது.

இரவாச்சு. chess board ஐ ராசநாயகம் கொண்டு வந்தான் chess விளையாடினால் நேரம் போவது தெரியாது. நேரம் போனது. ஒன்பது மணியானது. சிலர் நித்திரை சிலர் 'சள்' சிலர் 'கொண்' வெறும் படங்குகளில் தலைக்கு அணையாக கைகள் கொண்டு, பனியின் உக்கிரமான பெய்தலிலும் உடம்பில் போர்வை அற்று, நுளம்புகளைத் துரத்தி கைகள் ஓய்ந்து, பசிக்களை நல்ல நித்திரை தர, ''மானஸஸஞ்சரரே'' பாட்டு இதமாக இருந்தது.



காலை இப்படி விடிந்தது. bench இல் படுத்திருந்து, பெரும் வாகை மரங்களையும், நீலமான வானத்தையும் பார்க்க அழகாக இருந்தது. மரங்களில் புட்கள் சத்தமூட்டிக் கொண்டிருந்தன. இராமநாதன் மண்டபம் வெறுமனை 'உம்'மென்றிருந்தது. கலகலப்பற்று. பனியின் ஒட்டுதல் கொண்ட வாடைக்காற்று சிலிர்ப்பூட்டியது. சிலிர்ப்பில் 'யூகலிப்டஸ்' மரங்களும் சிலிர்த்தன.

ஐயர் வருவதும் பூக்கள் கொய்வதும் படுத்திருந்தபடி தெரிந்தது. அருகில் காகம் ஒன்று எச்சமிட்டது. எழுந்தேன். நிற்க முடியவில்லை. தலை சுற்றியது. சிறிது நேரம் அமர்ந்தவாறு இருந்தேன். தன்னை வருத்தி பரவாயில்லை. பசிக் களை கொஞ்சம் அமைதி கண்டது. எழுந்துபோய் மண்ணை சிறிது எடுத்து பல்லை விளக்கினேன். குழாயடியில் ரஞ்சித், உதயன், தர்மா, வாசு நின்றனர். ''தலையைச் சுத்துது'' என்றேன். ''பேசாமல் அந்தத் திண்ணையில் இரு'' எண்டான் உதயன். நான் வேண்டாமென்று முகத்தைக் கழுவினேன். வயிறு புகைந்தது. காலையில் முகம் கழுவியவுடன் ஒரு சொட்டு தேனீர் எதிர்பார்க்கும் புகைச்சல். தன்னை வருத்தி... பேசாது வந்து கொட்டிலுக்குள் இருந்தேன். இன்றைக்கு பசிக்களை கொஞ்சம் கரைச்சல் கொடுக்கப் போகுது.

திடீரென கேசவன் வாந்தி எடுக்கிறான் எனும் சேதி வந்தது. பாவம் - டொக்ரர் வந்தார். கேசவனின் உண்ணாவிரதம் அத்துடன் முடிந்தது, என நினைக்கிறேன். அவனைப் பிறகு காணவில்லை.

two-in-one இருந்தது கூட நல்லதாகப்பட்டது. நல்ல பாடல்கள். நல்ல இசை, நல்ல கவிதை, அருமையான சூழல். பாரதியார் பாடல்கள். வேறுமொழி பெயர்க்கப்பட்ட பாடல்கள் இவைகளெல்லாம் பாடல்களா? உயிர்த் துடிப்புகள்.

பசிக்களையும், கொட்டிலினுள்ளே கிடக்க வேண்டிய அவசியமும், பாரதியின் பாடல்களை வரிவரியாக அனுபவித்து சுவைக்க வைத்தது.

இன்றைக்கு முழுக்க கொட்டிலுக்குள்ளேயே படுக்கையுடன் சீவியம் போனது. இன்றைக்குப் பசி மரணவேதனையாக இருந்தது. ரஞ்சித்துக்குப் படுத்து படுத்தே முகம் உப்பிப் போனது. படுத்தபடி, எதிரில் தெரிந்த சுவரொட்டி வாசகம் இவை. ''அடிமைச் சங்கிலி அறுப்போம், நாங்கள் அதிலொரு வாள் செய்வோம்.''

இரவு மனோவுடன் பெண் விடுதலை பற்றி பற்றி கொஞ்சம் கதைக்க முடிந்தது. அவர்களிடம் வர்க்க விடுதலையையும், இனவிடுதலையையும், பெண் விடுதலையையும் பிரித்துப் பிரித்துப் பார்க்கும் போக்கே இருக்கிறது ஒரு ஆண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாத்திரம் நினைத்தால் பெண்ணுக்கு விடுதலை கிடைக்கும் எனும் அசட்டு நம்பிக்கை வேறு. தங்கள் பங்கென்பது வரையறைக்குட்பட்டது என்று கருதுகிறார்கள். இப்பொழுது இவர்களுடன் முட்டிமோதிக்கொள்வதால் பயனில்லை. இறுதியாக இதனைத்தான் சொன்னேன். ''தமிழர்களின் விடுதலைக்கு தமிழர்கள் தான் போராடவேண்டும். சிங்களவர்களிடமிருந்து எங்களது விடுதலையை எப்படி எதிர்பார்க்க முடியாதோ அதேபோலத்தான் பெண்விடுதலையும்...''

''அடிமைச்சங்கிலி அறுப்போம் நாம் அதிலொரு வாள் செய்வோம்'' இவ்வாசகம் நான் கத்துவது கனவில் தெரிந்தது. இன்று காலை ஏனோ தெரியாது எழும்பப் பிந்தியது. எழும்பியதும் கூட இவர்கள் இதனைச் சொன்னதனால் தான். மிகுந்த சத்தமிட்டுக் கொண்டு எல்லோரும் எழும்பி இதனைப் பார்த்தார்கள். தூரத்தில் கறுப்புப்புகை மேமுழுந்து சென்று கொண்டிருந்தது. அந்த வாகை மரத்தின் உச்சிக்கப்பாலும், தென்னை மரங்களின் தலையைத் தடவியவாறும் கறுப்புப் புகை மேலெழுந்து சென்று கொண்டிருந்தது. இப்படிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ''கந்தர்மடம் சந்தியிலை பஸ்சை எரிச்சுப் போட்டார்களாம். நாளைக்கு சுதந்திரநாள் எண்டபடியாலை...'' அடர்த்தி மிக்கதாகவும், மிகுந்த கருமை கொண்டதாகவும் இந்தப் புகை இவ்வாறு மேலெழுவதாயின், 1977 ஓகஸ்ரிலும், 1981 ஜுனிலும் யாழ்நகர் எரியுண்டபோது எழும்பிய புகை பற்றி கொஞ்சம் யோசிக்கலாம். அது புகையல்லவோ - வேறு ஏதும் குளிர்ந்த காற்றோ? குளிர்ந்த காற்றாயின் நெஞ்சினைத் தடவியபடியே சென்றிருக்கும். ஆனால் இது அப்படியல்ல; எங்கன்ரை நெஞ்சிலை இருக்கிறது தணல். அடிக்கடி யோசிக்க யோசிக்க உடம்பை உலுக்கியபடி பீறிட்டெழும் ஆத்திரம் - அது தணல்தான். அந்தப் புகை எங்கன்ரை நெஞ்சுகளிலை அடங்கிக் கொண்டது. அதுதான் அடிக்கடி இப்படிக் கொடுமைகளை சுமக்க வைக்கிறது.

வாசலுக்கு தடதடத்தபடி வந்தது truck தான். அதிலிருந்து குதித்ததும் army தான். பஸ்சை எரித்தவர்கள் campus இற்குள் தான் ஓடி வந்தார்கள். இந்தா நாங்கள் பிடிக்கிறம் எண்டமாதிரி இருந்தது அவர்கள் செய்கை. உள்ளுக்குள் வரவில்லை. நின்றார்கள் machine gun ஐ காட்டினார்கள். ஏறிப்போனார்கள். எங்களில் ஒருவர் முகத்திலும் அச்சம் குடிகொள்ளவில்லை. அப்பொழுது two-in-oneஇல் படித்தது ''அச்சமில்லை அச்சமில்லை''

பிறகு அரை மணித்தியாலத்துக்கொருக்கால் truck அல்லது ஜீப் campus ஐச் சுற்றிச் சென்று கொண்டிருந்தது.

இன்றைக்கு அவ்வளவாக பசிக்களை தெரியவில்லை. தாகம்தான் அதிகம். கேதீசுக்கு இண்டைக்காவது மூஞ்சையைப் பொத்திக் குடுக்க வேணும். வரவர தண்ணீக்குள்ளை உப்புத்தான் கூடுது. உதயனைப்பார்க்க ஆகலும் பாவமாக இருக்கிறது. நல்லா மெலிந்து போய் எலும்புக் கூடாகி. ரஞ்சித்துக்கு முகம் உப்புப்பெண்டு உப்பி பாக்க பயமாகி.

மத்தியானத்திற்கு சற்றுப் பின்பாக பாலன் வந்தான். சும்மா கொஞ்ச நேரம் கதை. அவனுடன் கதைக்க நன்றாக. அவன் வெளிச் சூழலை பற்றிச் சொன்னான். மக்கள் இன்று ஹர்த்தால் நடாத்துகிறார்கள். கடைகள் தங்களைப் பூட்டிக் கொண்டன. பாடசாலைப்பக்கம் மாணவர்களைக் காணவில்லை. வீதி வெறிச்சோடி இருக்கிறது. அங்குமிங்கும் ஜீப்புகள் திரிகிறது, என்று சொன்னான். பிறகு இதனையும் இரகசியமாகச் சொன்னான். ''ரண்டு மூண்டு மினி பஸ்ஸிலை ஆமிக்காறாங்கள் திரியுறாங்கள்'' பிறகு இன்னும் மக்களின் ஆயத்தமின்மை பற்றியும் சொன்னான். வித்தியாசமான சூழலின் செய்தியோடு பொழுதுபட அவன் போனான்.

அன்றைக்கு நித்திரை வேளைக்கே வந்தது.

காலை எழுந்தபோது குருவிச் சத்தம் துல்லியமாகக் கேட்டது. இது மிகவும் அதிகாலை. காற்று மெலிதே வீசின. நிலத்தில் சிறிதே வெளிச்சம் தெரிந்த, வானத்தில் சிவப்புக் கலந்த நீலம் சொற்பமாய் பட, ஆட்காட்டி குருவி குரல் எழுப்பி, மற்றவர்கள் அசிங்கமாய் தூங்கும் இந்நேரம் என்னை எழுப்பியது என்ன?

எழும்பி நின்றபோது தெரிந்தது. கைகல் நடுங்கத் தொடங்கின. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. வேர்க்கத் தொடங்கியது. நாக்கு வறண்டது. என்னாலை ஏலாது. வயிற்றுக்குள் 'கொள கொள' என்று சத்தம். நான் மயங்கப் போறன். கொஞ்சமாய் உப்புக் கரித்த தண்ணீர் குடித்தேன். சிறிது ஆயாசம். bench இல் படுத்துக் கொண்டேன். நித்திரை இல்லை.

சிறிது நேரத்துக்குப்பிறகு ஒவ்வொருவராக எழும்புவது தெரிந்தது. இன்னும் சிறிது நேரத்திற்குப் பிறகுதான் சரோ மயங்கி விழுந்தாள். அது துரதிர்ஷ்டமான விஷயம். நேற்றுவரை மிகவும் உற்சாகமாக இருந்தவள். தைரியமூட்டினவளின்னும்தான்ஏழெட்டு நாளுக்கு இருக்கத் தயார் என்றவள். சாகும்வரை உண்ணாவிரதம் என்றால் தனக்கு ஒரு வருஷம் பிடிக்குமென்று கலகலக்கச் சொன்னவள். மயங்கிப் போனாள். அவசரமாக campus ஜீப்பில் ஏற்றி dr. watson இடம் கொண்டு சென்றார்கள். இதனைப் பார்த்துக் கொண்டு நின்றோ என்னவோ சுசியும் மயங்கி விழுந்தாள். நேற்றும் தலைக்குள் ஏதோ செய்தது என்று சொன்னவள்தான். தனது பிடிவாதத்தை தளர்த்த விரும்பா நின்றவள். அவளும் மயங்கி விட்டாள். இன்னொரு வானில் அவள் dr. watson இடம் கொண்டு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகப்பட்டாள். சிறிது நேரத்தில் வெள்ளை உடுப்புடன், தலை வழுக்கையாகி, கண்ணாடி போட்ட, கருணை முகம் கொண்ட தமிழ் கொஞ்சமே தெரிந்த dr watson வந்து ஆறுதல் சொன்னார். கடவுளைத் தியானித்தால் இக்கணத்தில் சுகம் சேர்ப்பிக்கப்படும் என்று சொன்னார். பிறகு போனார்.

பிறகு எட்டு மணியளவில் வாசலுக்கு truck வந்து நின்றது. armies இறங்கினார்கள். campus ஐச் சுற்றி பத்தடிக்கு ஒரு army ஆக machine gun உடன் நின்றனர். ஆக்கிரமிக்கப் பட்ட பிரதேசமாகுமாப்போல. அந்நியமணம் சூழ்ந்த அக்காற்றிலும் இப்பாடல்தான் பரவியது. "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்."

பத்து மணியளவில் ராணுவம் வெளியேறியது. அதற்குப் பிறகு வந்த சத்தியன் "கொக்குவிலில் நடக்கிற உண்ணாவிரதக்காறர் இஞ்சை வர வெளிக்கிட்டபோது army machine gun ணோடை சுத்த வர நின்டு மறிச்சுப் போட்டாங்கள். சனங்கள் அந்த இடத்திலேயே இருந்திட்டார்கள்." என்றான். இந்த அவசரமான சூழலிலும் எனக்கு உடம்பு பதறத் தொடங்கியது. நாக்கு வரண்டு போய் காலை மாதிரி அந்த உப்புக் கரித்த தண்ணீர் தஞ்சம் ஆனால் இம்முறை அடங்குவதாய் காணவில்லை. மிகுந்த சிரமப்படும் நேரம் இது.

இந்த நேரத்தில்தான் அது நடந்தது. நான் சிரமப்பட்டு அதனைப் பார்த்தேன். என்னால் எப்படி உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்? சொண்டுகளைக் கடித்துக் கொண்டு நான் எப்படி மரம் போல் நின்றேன்? அவர்கள் ராணுவத்தினரின் கண்களுக்கு மண்ணைத் தூவிவிட்டு எப்படி இதனைக் கத்திக் கொண்டு வர முடிந்தது? "எங்கள் சக்தி மக்கள் சக்தி. மாணவர் சக்தி மாபெரும் சக்தி" 'நவபாசிசவாதி' என அவர்கள் கொடும்பாவியை எரித்தபோது எனக்கு என்னை அறியாமல் அழுகை வந்தது. என்பது மிகவும் சத்தியமான வார்த்தை. நான் மிகவும் அதனை அனுபவித்து உணர்ந்தேன். கட்டுப்படுத்த முடியாமல் கண்களில் கண்ணீர் தளும்பிற்று.

இதனை இவ்விடத்தில் முடிக்கலாம். அல்லது உண்ணாவிரதம் முடிந்தபோது மிகவும் அவசரப்பட்டு பால், பழம், பாயாசம் சாப்பிட்டதைப் பற்றிச் சொல்லியும் முடிக்கலாம்.





—தா. இராமலிங்கம்

குடா நாட்டில் இப்போது
கொளுத்துகுது கோடைவெயில்!

ஆனையிறவு உப்பளத்தில்
உப்புக் குவியல்கள்
பளிங்குக் குன்றுகள்!
சரித்திரம் காணாத
சாவிளைச்சல்! சாவிளைச்சல்!!

அய்யோ வாடி வீடே
நீ
வதை கூடம் ஆனாயே!

நகக் கண்கள் ஊடு
நீட்டுசி மாட்டுகிறாய்
குண்டாந் தடியாலே
குதிக்கால் பிளக்கின்றாய்
விரலில் இழை இறுக்கி
தலைகீழாய்த் தூக்குகிறாய்
மிளகாய்ப் புகையினிலே
மூச்செடுக்க வைக்கின்றாய்.

அய்யோ வாடி வீடே
நீ
வதை கூடம் ஆனாயே!

குறியின் துவாரத்தில்
சலாகை இறுக்குகிறாய்
கதறிக் களைப்புற்று
விடாய் மிக்கு
நீர் கேட்டால்
வாந்தி எடுத்து
வயிறு வாய் புண்ணாகை
கடல் நீர் பருக்குகிறாய்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதியென இனி உன்னை
யார் நம்பி வருவார்கள்?
கதறல் அலறல் எல்லாம்
காற்றில் பதிந்து கடல்கடந்து கேட்கிறது!
அடுக்குமுறை கொந்தளித்துப்
பெருக்கெடுத்துப் பாய்கிறது!

வலைகுடா யுத்தத்தில்
எண்ணைக் குதங்கள் எல்லாம்
தீப்பற்றி எரிகிறது!

பாலஸ்தீனத்தை
இஸ்ரேல் விழுங்கிவிட்டு
மூச்செடுக்க முடியாமல்
முட்டுவைத்து முனகுது!

வெள்ளை இனத்து வெறியர் ஆட்சியிலே
இருண்ட கண்டத்தில்
எழுகின்ற அவல ஒலி
காற்றில் மிதந்து கடல் கடந்து கேட்கிறது!

அய்யோ வாடி வீடே
நீயும்
கொலைகூடம் ஆனாயே!

---

'புதுசு'விற்கும் அவரிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. புதுசுவின் தீவிர வாசகர். மக்களுடன் இணைந்த வேலைகளின் முன்னணிச் செயலர். அவருடன் பலதும் பற்றி விவாதிக்க நேர்ந்ததும் கூட நேற்றுப் போல. அவர் இறந்ததும் நேற்றுப் போலத்தான். திரு. அ. விமலதாசன் எனும் பெயர் கொண்ட ஆம் 'மனிதனின்' இறப்பு அதிர்ச்சியானதே. அவரின் குடும்பத்தினர்க்கு புதுசுகளின் துயர் நிறை அஞ்சலி.

---



## அளவெட்டி படைப்பாளிகள் வட்டத்தினரின் 'திருவிழா'

### —ஒரு வீதி நாடகமாக.

நான் அறிந்த வரையில் இலங்கையில் தமிழில் எழுந்த முதலாவது வீதி நாடகம் இதுவாகத்தான் இருத்தல் வேண்டும்.

1983 மே 1ம் நாள் கிளிநொச்சி ரொட்றிகோ மைதானத்தில், தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியினர் நடாத்திய மாபெரும் மே தின எழுச்சி விழாவில் 'திருவிழா' எனும் இந்நாடகம் வீதியில் தெருவிளக்கின் வெளிச்சத்தில் இடம் பெற்றது'

அன்று, பொலிஸ் படையினர் மே தின விழாவிற்கு அனுமதி தர மறுத்ததினால், மைதானத்திற்குள் கிளிநொச்சித் தொகுதி விவசாயிகளின் சிறு ஊர்வலத்துடன் ஆரம்பமான விழாவில் சிலரின் சொற்பொழிவின் பின்னர், நகரத்திலுள்ள பார்வையாளர்களின் பங்கேற்பின் உடன், நடிகர்கள் அணிந்திருந்த உடைகளின் மேல் நாடகப் பாத்திரங்களின் உடைகளை அணிந்து, பார்வையாளர்கள் வட்டமாக அமர்ந்திருக்க இந் நாடகம் மேடையேறியது. இந்நாடகத்திற்கான பாடகர்கள் பார்வையாளர்களின் மத்தியிலேயே இருந்து பாடல்களை இசைத்ததானது, நாடகத்தைப் பார்வையாளர்களிடம் தொற்ற வைத்ததை சுலபமாக வெற்றியில் கொணர்ந்தது.

சுமார் கால் நூற்றாண்டுக்கு மேலான தமிழ் அரசியற் கட்சிகளின் வரலாற்றை கேலியுடனும், கிண்டலுடனும் சொல்லப்பட்டிருந்த இந் நாடகமானது பார்வையாளர்களிடம் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இனிவரும் சூழலில் வீதி நாடகத்தின் வெற்றியும் சாத்தியப்பாடும் குறித்து, தொழிலாளர் தினத்தில், கிளிநொச்சி நகரத்தில், அளவெட்டி படைப்பாளிகள் வட்டத்தினரின் திருவிழா நாடகம் ஒரு எடுத்துக்காட்டாகிறது.

— ஊசி

---

காந்தீய அமைப்புச் செயலாளர் சோ. இராசசுந்தரம், தங்கத்துரை உள்ளிட்ட 54 போராளிகளின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். பெறுமதிமிக்க, அரியதான 54 போராளிகளின் உயிர் சார்ந்த குடும்பத்தினர்க்கு எங்கள் அஞ்சலி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கடலும் கரையும்

அலையடிக்கும் கடல்;
அதனருகே
நீண்ட பெரு மணற் காடு.

குருக்ஷேத்திரத்துப் போர்க்காட்சி போல
விம்மித் தணிந்த அலைகளோ
தரையை
ஓர் முறை தழுவி,
வெட்க முற்றுப்
பின்னே வேகமாய்த் திரும்பின.

இந்தக் கரையின் மணற் பரப்பினிலே
இலந்தை மரங்கள்.
இந்த மரங்களின்
உச்சியில் ஏறினுல்
இராமேஸ்வரத்தின் ஓர் முடி தெரியுமாம்.
அவ்வளவு நெருக்கம்.
இதுவும் அதுவும் ஒன்ருய் இருந்து
இடையே கடலால் அரியுண்டு போனதாய்
பூமிசாத்திர வல்லுனன் ஒருவன் போல்
தாத்தா,
அனுபவ முதிர்ச்சியில் சொல்லுவார்.

இந்தக் கடலின் நீண்ட பரப்பில்
நீந்திப் பழகி
இருல்கள் - மீன்கள் - கடல்படு திரவியம்
சுதந்திரமாகப் பெற்ற ஓர் காலம்
தாத்தாவோடு அற்றுப் போயிற்று!

காட்டுக் குதிரை கனைக்கும் வேளை
வயிற்றுப் பிழைப்பை மனதிற் கொண்டு
மனைவியைக் கரையே
காவல் வைத்து,



கடலில் சென்ற காளைகள்
எல்லை தாண்டிய புலிகளாய்
மீண்டும் திரும்புதல் இல்லை.

...த்தா,
அவரது தாத்தா
அதற்கு முன்பு இருந்த பரம்பரை
நிமிர்ந்து கிடக்கும்
இந்தக் கடலிற் தான்
நம்பிக்கையுற்றுக் கிடந்தது.

இன்று,
கொலம்பஸ் கண்ட 'அத்திலாந்திக்'காய்
'சமுத்திர விழுங்கிகள்' நிறைந்து,

இப் போதெல்லாம்
இலந்தை மரத்தின் உச்சியிலேறினுல்
இராமேஸ்வரத்தின் முடி தெரியாது;
நீல நிறத்தில்
கடற்படைக் கப்பல்கள்.

மா. சித்திவினுயகம்பிள்ளை

நாங்கள் இழந்து போய் நிற்கிறேம். வீட்டை, வாசலை, உடைமைகளை, சொத்துக்களை இழந்தோம். அன்பை, ஆதரவை இழந்தோம். எல்லாவற்றிற்கும் மேலாக மகத்துவம் நிறைந்த பல உயிர்களை நாம் இழந்து போனேம்.

பலவற்றை இழந்த தமிழ் மக்களின் துயரினில் புதுசுவும் பங்கு கொள்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆதரே....!

ரன் மெனிக்கே...!
எனது குரலை நீ கேட்டல் கூடுமா?
இதயத்தின் அடியிலிருந்து
நான் கதறும் ஓலம்
உன் செவிகளுக்கு எட்டுமா நண்பி?

நீ 'ரைப்' அடிக்கும் மேசை
எனக்கு முன்னால் இருந்ததால் மட்டுமா
நீ எனக்கு நண்பியானாய்?
ஒவ்வொரு காலையும் மாலையும்
யந்திரமாய் ஒன்றாய் ஓடிக்களைத்து
நெரிசலான பஸ்சினுள் பயணம் செய்வதாலா?
அலுவலக நண்பர் குழாமுடன்
'பிக்னிக்' போகையிலும்
ஸ்ரீபாத மலையின் படிகளிலும்
ஒன்றாய்க்குடித்த 'கொக்கோக்கோலா'வா
எம்மை நண்பர்களாக்கியது?

மனித உறவுதான்.
மனிதம் படைத்த உன்னத உறவுதான்
உனது காதலையும் எனது காதலையும்
ஒளிர்வித்தது.
'ஆதரே' என்ற உனது ஒவ்வொரு சொல்லிலும்
மனிதம் மிளிர்ந்தது நண்பி.

அன்று —
எரிந்த என் உடமைகளுடன்
உனது மணி மணியான கடிதங்களுந்தான்
சாம்பராயிற்று.
ஓரே கரிக்குவியல் நண்பி.
நெருப்புச் சுவாலைகளுக்கும்



புகைமண்டலங்களுக்கும் நடுவே
இறுதியாய் நான் பாதுகாத்து வைத்திருந்த
எனது பிறந்தநாளுக்கு
நீ தந்த 'சேட்'டையும் இழந்து
உள்ளங்கியுடன் மட்டும்
ஒவ்வொரு காலையும் மாலையும்
நீயும் நானும் யந்திரமாய்
ஓடுகின்ற பம்பலபிட்டித்தெருவில்
ஓடிய போது......

கண்ணீரும் வற்றிய நிலையில்,
மெனிக்கே
மனிதம் — மனித உறவு —
உறவுகளின் உன்னதம்
காதல் — ஆதரே

ஒரு கணப்பொழுதில்
மெனிக்கே
கையில் அலரிப் பூக் கொத்துடன் —
வெள்ளைச் சேலையுடன் — நீயும்,
வெள்ளை உடுப்புடன் — நானும்,
'பன்சலை' போனது
நினைவில் ஓடியது.
சாந்தமான புத்த பகவானின்
புனித முகமும்
நீ வணங்கிய விதமும்......
அந்த இனிய மாலை.

'மகே ஆதரே'
ரன் மெனிக்கே
என் நெஞ்சினுள்
மனிதம் — மனித உறவு
சந்தேகமானது என உணர்கிறேன்.
எனது குரலை நீ கேட்டல் கூடுமா?
இதயத்தின் அடியிலிருந்து
நான் கதறும் ஓலம்
உனக்குக் கேட்கிறதா ரன் மெனிக்கே?

க. ஆதவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சஞ்சயன் பக்கங்கள்

'மகத்தான அறுபதுகளின்' சாதிப் பிரச்சினை பற்றி 'நான் முந்தி, நீ முந்தி' என விவாதக் (?) கட்டுரை எழுதிக் குவித்தவர்கள், முக்கியமானதொரு கட்டுரை பற்றி மௌனம் சாதித்ததன் அர்த்தம் சஞ்சயனுக்குப் புரியவில்லை. மல்லிகை வாசகர்களின் 'புரியும்' தன்மையும் பேராசிரியர் கா. சிவத்தம்பி சொன்னால் 'அப்பீல்' கிடையாது என்ற மனோபாவமாயுமிருக்கலாம். மல்லிகையின் பெப்-மார்ச் 83 இதழ்களில் **'புதிய சவால்கள், புதிய பிரச்சினைகள், புதிய எழுத்துக்கள்– இலங்கைத் தமிழிலக்கியத்தின் செல்நெறித் திருப்பம் பற்றிய ஓர் உசாவல்.'** (அதென்ன, செல்நெறித் திருப்பம்? என சஞ்சயன் புருவங்களை நெளிப்பது சிவத்தம்பிக்கு புரிகிறதா?) என்று நீண்ட தலைப்பிட்டு கார்த்திகேசு சிவத்தம்பி எழுதிய நீளமான கட்டுரை பற்றி இங்கு எழுதப்படுகிறது.

கட்டுரையை எழுதியிருக்கும் பேராசிரியர் சிவத்தம்பி உள்ளிட்ட முற்போக்கு (?) எழுத்தாளர் சங்கத்தினர் மீது வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளில் முக்கியமானதான தேசிய இன ஒடுக்குமுறை பற்றிய மௌனிப்பு என்பதற்கு எதுவித பதிலும் சொல்லாது 'சூழலின் உறுத்தலால் எழுதப்பட்ட கட்டுரையாகவே எனக்குத் தோன்றுகிறது. ஆனால், செ. கணேசலிங்கன் போலல்லாமல் (குமரன் 57) கொஞ்சம் விரிவாகவே இதனை எழுதியிருக்கிறார். சமகால ஈழத்து இலக்கியத்துடனான பரிச்சயமின்மை, வழமையைப் போலவே பட்டியலிடும் மனோபாவம், விவாதத்திற்குரிய கருத்துக்கள் ஆகியவற்றை இக்கட்டுரை வெளிக்காட்டி நிற்கின்றதெனலாம்.

இன்றைய சூழல் தற்செயலானதல்ல. நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. அந்த வரலாற்றில் முற்போக்காளரின் பாத்திரம் கறைபடிந்தது. தோசைக் கடை மசால் வடை ஊர்வலம், தரப்படுத்தலில் ஒத்துழைப்பு, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள் பற்றிய மௌனம், என்பவற்றூடாக இன்னும் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்காதமை என்பன முக்கியமானவை. இவ்வாறான வரலாற்றுத் தவறுகளை ஒப்புக் கொள்ளும்வரை நீங்கள் சொல்லும் சிங்களப் புத்திஜீவிகளுக்கு வழங்கும் நட்பைக்கூட தமிழ் மக்கள் உங்களுக்கு வழங்கமாட்டார்கள் என்பதையும் சொல்லிக்கொண்டு, புதிய சவால்கள், புதிய பிரச்சினைகள், புதிய எழுத்துக்கள் தோன்றும்பொழுது நீங்கள் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள் என்றும் கேட்கத் தோன்றுகின்றது. கட்டுரையில்





இத்தகைய எழுத்துக்கள் இப்போதுதான் தோன்ற ஆரம்பித்துள்ளன என்ற தொனியில் கார்த்திகேசு சிவத்தம்பி எழுதியிருக்கிறார். உண்மை அதுவல்ல. இப்போது அது பரவலாக வடிவ முறுகிறது எனலாம். அப்படியாயின் தோற்றுவாய். எப்போது என்பது மிகமுக்கியமான வினாவே. தமிழரசுக்கட்சி காலத்து காசி ஆனந்தன் வகையறுக்களின் வரட்டு இலக்கியங்களையும், சமகாலத்து செழுமையான இலக்கியப் பாங்கையும் அவர் வேறுபடுத்தியிருப்பதில் சிவத்தம்பி சரியான இடத்தில் உள்ளார். எனினும் இத்தகைய செழுமையான போக்கினைப் பற்றிய அவரது கூற்றுக்கள் குறிப்பானதாக இல்லை. இவ்வாறு செழுமையான இலக்கியங்களுக்கு அலை சஞ்சிகை தான் முக்கியமான விளைநிலம் எனலாம். தேசிய இனப் பிரச்சினையில் முற்போக்காளரின் நிலையை அம்பலப்படுத்திய அதே வேளை அவ்வகை இலக்கியங்களுக்கு களமுமமைத்து கொடுத்திருக்கிறது. கொடுத்து வருகிறது.

பின்னர் புதுசு தனது இதழ்களில் அதிகமான பக்கங்களை இவ்வகை இலக்கியங்களுக்கு வழங்கியது. சேரன், ஜெயபாலன் போன்றோரிற்கு களமமைத்து கொடுத்த அதே நேரத்தில், புதுசு மூலம் புதிய இலக்கியகர்த்தாக்கள் வெளித்தெரிய வந்தார்கள். ஹம்சத்வனி, ஊர்வசி, பாலசூரியன், விஜயேந்திரன், சபேசன், தர்மபாலசிங்கம், விக்கினேஸ்வரன், சித்திவிநாயகம் பிள்ளை போன்றோர்கள் இங்கு கவனத்திலெடுக்கத் தக்கவர்கள். இவர்களின் படைப்புக்களில் இவ்வகை பிரக்ஞை கூர்மையுற்றது. நவீன தமிழிலக்கியத்தைப் பாதித்தது. ஆனால் சிவத்தம்பிக்கு சேரனதும், ஜெயபாலனதும், ஆதவனதும் கவிதைகளையே வாசிக்கக் கிடைத்திருக்கிறது. மற்றவர்களின் ஆக்கங்களை தேடிப் படிக்க வேண்டியது உங்கள் கடமை. அவை உங்களைத் தேடி வரமாட்டாது. அப்படி தேடி வாசிக்கும் வரைக்கும் இப்படியான கட்டுரைகளைத்தான் எழுதிக் கொண்டிருக்க நேரிடும்.

''அக்காலத்தில் அரசியலில் தமிழுக்கு இடம் மறுக்கப்பட்டு வந்ததெனினும், கலை இலக்கியத் துறைகளிலே ஏற்பட்ட இவ்விழிப்பு அரசியலில் பேசப்படாத கோட்பாடுகள் இலக்கியத்தில் பேசப்பட்ட புதுமை, இன்று பின்னோக்காகப் பார்க்கும் பொழுது, தமிழ் பேசும் மக்களின் தேசிய இனத் தனித்துவத்திற்கு வழிகோலுவதாகவே இருந்தது. அக்கால அரசியலில் குழுமம், இனம் என்பன பேசப்பட்டனவேயன்றி தேசிய இனம் என்பது பற்றிப் பேசவில்லை.

இலங்கைத் தமிழரின் அரசியல் தனித்துவத்திற்கான போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சஞ்சயனின் மூன்றாவது பக்கம்

புத்திஜீவிகளும் அரசாங்கத்தினரும் இலங்கைத் தமிழரின் பண்பாட்டுத் தனித்துவத்தை, இலக்கியத் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டனர். இந்தக் கலை இலக்கிய இயக்கத்தின் மகத்தான சாதனை இதுவேயாகும்.'' என்று சிவத்தம்பி எழுதியிருப்பது விவாதத்திற்குரியதாக சஞ்சயன் கருதுகிறான்.

மகத்தான மு. போ. எ. சங்கம் (மொஸ்கோ கொம்யூனிஸ்ட் கட்சி பிரிவு + சீன கொம்யூனிஸ்ட் கட்சி பிரிவு) இலங்கைத் தமிழர்களின் தேசிய இனத் தனித்துவத்துக்கு மகத்தான பங்களிப்பு வழங்கியிருக்கிறது என்று இன்றைய சூழலில் இவர்களால் குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது. கடந்த காலங்களில் சுய நிர்ணய உரிமையை எதிர்த்தவர்கள், இலங்கைத் தமிழர்கள் தனியான ஒரு தேசிய இனம் என்பதையே ஒப்புக்கொள்ள மறுத்தவர்கள் இன்று அந்தக் காலத்திலேயே இவை எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டது மாதிரி எழுவது சரியல்ல.

மற்றும் சுய நிர்ணய உரிமையை இன்று எல்லா மார்க்சீய கட்சிகளும் ஏற்றுள்ளன என்கிறார். சுயநிர்ணய உரிமை என்று இவர்கள் கூறுவது எந்த அர்த்தத்தில்? சிறீ லங்கா இடதுசாரிகள் சொல்வது போல சுயநிர்ணய உரிமை உண்டு; ஆனால் பிரிந்து செல்லவிட மாட்டோம் என்ற மாதிரியா? புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், நவ சமசமாஜக் கட்சி ஆகியன தெளிவான கோரிக்கைகளை இவ்விடயத்தில் வெளிப்படுத்தியுள்ளன. ஏனையவை இன்றும் கூட சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாட்டிலேயே உள்ளன என்பதை ஏன் சிவத்தம்பி மறைக்கிறார்?

பேராசிரியர் கைலாசபதி மீதும், பேராசிரியர் சிவத்தம்பி மீதும் கூறப்படும் குற்றச்சாட்டொன்று இங்கு நிரூபணமாகியிருக்கிறது. பட்டியலொன்றை கட்டுரைகளில் ஒப்புவித்து விடுவதை அவர்களின் மனோபாவம் என்பதா, அல்லது...? இக் கட்டுரையில் இவரின் பட்டியலைப் பார்ப்போம். ''தமது படைப்பில் முதிர்ச்சி பெற்றோர்களாக சேரன், சட்டநாதன் (சிறுகதை) புதுவை இரத்தினதுரை, ஆதவன், ஜெயபாலன் (கவிதை) ஆகியோரைக் குறிப்பிடலாமெனக் கருதுகிறேன்... 'முந்தின' எழுத்தாளர்களுள் இந்தப் புதிய உணர்நிலையை விளங்க முயல்பவருள் தெணியானையும் ஒருவராகக் கருதுகின்றேன். யோகநாதன், செங்கை ஆழியான் ஆகியோரின் கன அகற்சி கவனிக்கப்பட வேண்டியது.'' தேசிய இனப் பிரச்சினை பற்றி இவர்களில் தெணியானும், செங்கை ஆழியானும், சட்டநாதனும் என்ன எழுதினார்கள் என்று தெரியவில்லை. தெணியானுக்கும்,



## சஞ்சயனின் நான்காவது பக்கம்

செங்கை ஆழியானுக்கும், சட்டநாதனுக்கும் கூட இது தெரியாமல் இருக்கும். சிவத்தம்பிக்குத்தான் வெளிச்சம். ஏனையவர்களில் சேரனும், ஜெயபாலனும், ஆதவனும் கவனிப்புக்குரியவர்களே. யோகநாதன், புதுவை இரத்தினதுரையை விடவும் நுஃமான், யேசுராசா போன்றோர் அதிகம் பாதித்திருக்கிறார்கள். இன்னும் ஊர்வசி, வில்வரத்தினம், ஹம்சத்வனி போன்றோர் பற்றியும் குறிப்பிட வேண்டியது அவசியம். ஆனால் என்ன உளத் துணிவோடு புதுவை இரத்தினதுரையையும் யோகநாதனையும் இதில் சேர்த்தார் என்பது புரியவில்லை. புதுவை இரத்தினதுரை பற்றி புதுசு-1இல் நுஃமான் எழுதிய விமர்சனத்தைப் படித்திருந்தால் இப்படிப் பட்டியலிடத் தோன்றாது. யோகநாதன் பற்றி குறிப்பிடத் தோன்றுவது இரவல் தாய்நாடு குறுநாவலுக்காக. ஆனால் அது ஒரு வியாபாரத் தேவைக்காக எழுதப்பட்ட ஒரு அபத்தமாகவே எனக்குத் தோன்றுகின்றது. நாவல் சிறுகதைகளில் குறிப்பிடும்படியான வளர்ச்சி ஏற்படவில்லையாயினும் சாந்தன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரினைக் குறிப்பிடலாம். ஒன்றுமே எழுதாதவர்களையெல்லாம் எழுதியுள்ளதாகப் பட்டியலிட்டு, உங்களையும் குழப்பி மற்றவர்களையும் குழப்ப வேண்டாம் இனிமேலாவது எழுதுபவர்களைத் தேடி வாசியுங்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

இவ்வளவு கருத்துக்களும் அக் கட்டுரையில் எனக்கு முரண்பாடானவை எனக் கூறிக்கொண்டு' நீங்கள் இந்தக் கட்டுரை எழுதிய பின்பும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ன செய்கிறது? உண்மையான அக்கறையோடு யார் இதில் ஈடுபடுகிறார்கள் என்பதையாவது கண்டு கொண்டீர்களா?

● ● ●

யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய ரியூட்டரி எது என்று ஒருமுறை கேட்கப் பட்டபோது 'யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்' என்று பதில் வந்ததாகக் கூறுவார்கள். ஐந்தாறு வருடங்களாக ஒரே மாதிரியான பாடக்குறிப்புகளை கொடுத்து வருவதோ என்னவோ, கேள்வி கேட்கப்பட்டதும் பதில் வந்ததும் உண்மை.

இந்தப் பல்கலைக் கழகத்துக்கு ஒரு ஆளுனர் சபை உள்ளது. அரசாங்கத்திற்கு 'ஆமாம் சாமி' போடுகிற புள்ளிகள் சிலர், யாழ்ப்பாணத்துச் சைவ வேளாளத் தமிழ்ப் பாரம்பரியத்தைச் சரியவிடாது 'காத்து' வரும் சிவாகம ஞான பானுக்கள் (அல்லது பிரதிஷ்டா பூஷணங்கள்) சிலர், இப்படிக் கொஞ்சப் பேர்கள் இவ்வாளுனர் சபையில் உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அண்மையில், தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தி, 'இந்துப்பாரம்பரியத்தில் வராதவர்,' 'மார்க்ஸிஸவாதி' என்கிற காரணங்களின் பேரில் ஒருவர் நிராகரிக்கப்பட்பட்டார்.

அவர் கலாநிதி. கா. சிவத்தம்பி கலாநிதி. கா. சிவத்தம்பியின் பல கருத்துக்களுடன் சஞ்சயன் முரண்பட்டாலும், தமிழிலக்கிய விமர்சனத் துறையில் அவருடைய பங்கு சாதாரணமானது அல்ல. நா. வானமாமலைக்கு கலாநிதிப் பட்டம் வழங்கினோமென்றுபெருமைப்படுகிற அதே பல்கலைக் கழகத்தில்தான் இதுவும் நடந்திருக்கிறது. (unity of the opposites?)

## குழந்தாய்

தமிழில்: க. முருகவேல்

மூலம்: langston hughes (நீக்ரோ)

ராசா,

ஏ, ராசா,

உந்தத் தெருவிலை நீ விளையாடாதை, மேனை.

சனி ட்ரக்குகள்

உதாலை போகுது பார்.

உனக்கு மேலாலை ஒரு ஓட்டம்

அதோடை நீ சரி.

ராசா, உந்தந் தெருவிலை நீ விளையாடாதை மேனை!




# Jeyem's Institute

**K. K. S. ROAD, CHUNNAKAM.**

**A / L கலை, வர்த்தகம், விஞ்ஞானம்**

மற்றும்

**O / L, 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புக்களும்**

**O/L Day Classes, Short Hand Typing Montessory.**

நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| ECCONOMICS | — Mr. வரதராஜன் |
| COMMERCE | — Mr குமாரவேல் |
| ACCOUNTS | — Mr தேவதாஸ் |
| LOGIC | — Mr. வேல் சிவானந்தன் |
| GEOGRAPHY | — Mr சண் |
| TAMIL HINDUCULTURE | — Mr. பாலா |
| BOTANY | — Mr. சிவவீரசிங்கம்<br>Mr. இளங்கோ |
| ZOOLOGY | — Mr. நாகநாதன் |
| CHEMISTRY | — Mr. மனோகரன் |
| PHYSICS | — Mr. வர்ணகுலசிங்கம்<br>Mr. கணேசன் |
| PURE MATHS APPLIED MATHS | — Mr. கமலசிங்கம் |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிதினுப்பூர் சிறைச்சாலையில்
புரட்சிகரத் தோழர்கள்
பாடும் பாடல்

## இரவுகள் உடையும்

காலியாயிருக்கிறது அரிசிப்பானை
ததும்புகிறது விழிக்குடம்.
இந்த இரவோ முடிவில்லாதது.
அம்மா இனி நான் உன்னை
எப்படிக் காப்பாற்றுவேன்
மக்கள் படை அணிவகுப்பில்
மலைகள் அதிர்வதை நான் காண்கிறேன்.
அம்மா,
இனியும் என்னைத் தடுத்து நிறுத்தாதே.
இரவுகளை உடைத்து
சூரியனை எழச் செய்ய
நான் போக வேண்டும்.


புதுசு விற்கு எமது வாழ்த்துக்கள்.

புதிய அமைப்புடனும்
புதிய வீச்சுகளுடனும்
இயங்கி வரும்
எமது ஸ்தாபனத்தில்,

தரமான, இலக்கிய அறிவியல் நூல்களை
பெற்றுக் கொள்ளலாம்.

வகை மாதிரிகள் சில:

| | | |
|---|---|---|
| சிவப்பு ரிக்ஷா | — | தி. ஜானகிராமன். |
| த்வனி | — | லா. சா. ரா. |
| வேட்டி | — | கி. ராஜநாராயணன். |
| இரவுகள் உடையும் | — | சூரியதீபன். |
| கல்லிற்கு கீழும் பூக்கள் | — | மாலன். |
| காடு | — | பா. செயப்பிரகாசம். |
| அன்று பூட்டிய வண்டி | — | ந. முத்துச்சாமி. |
| தியானம் | — | என். கே. மகாலிங்கம். |
| சூரியனைச்சுமப்பவர்கள் | — | இன்குலாப். |
| எழுத்தும் பிரக்ஞையும் | — | அம்ஷன்குமார். |
| வாழ்விலே ஒரு முறை | — | அசோகமித்திரன். |

தொடர்பு கொள்ளுங்கள்:

# ரகுநாதன் புத்தகசாலை

## 3, நவீன சந்தை

## யாழ்ப்பாணம்.

www.tamilarangam.net

For Fashionable Tailoring and
SHIRTINGS & SUITINGS

**SMACS**

**12, Bazaar Lane,**
**Jaffna.**

Branch :

**FASNAS**

TEXTILE and TAILORING

**48, Model Market,**
**Jaffna.**

காலம் பெறுமதியானது
காலத்தை வீணுக்காதீர்

நீலந் தோய்க்கும் வேலைச் சிரமம் வேண்டாம்.
பாவியுங்கள் நுரைவளம் மிகுந்த மில்க்வைற் நீலசோப்.
நொடிப்பொழுதில் சம்பூரண சலவையைத் தருகிறது.

மேலுறைகளைச் சேகரித்து
பரிசில்களையும், புதுவருடக் கலண்டரையும்
பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்**
**சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 63233

ஈஸ்வரி விலா, சிறுவிளான், இளவாலையைச் சேர்ந்த அ. ரவி என்பவரால் 601, கே. கே. எஸ். வீதியிலுள்ள பற்ஸ் பிறின்ரேர்ஸில் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

**COMTECK**

*With best Compliments from*

Computer programming for
basic & cobal
I. A. A, I. A. B., I. C. M. A., B. Com.

மற்றும் க. பொ. த. (உ. த.)
க. பொ. த. (சாதா.) வர்த்தக வகுப்புகள்

# Comteck Computer Institute

**82, 3rd Cross Street**
**JAFFNA**

(பிரதான வீதி மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்